

# பண்படு

(தெருவெளி நாடகப் பிரதிகளின் தொகுப்பு)







4272

எஸ்.ரீ.குமரன்
எஸ்.ரீ.அருள்குமரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்படு

(தெருவெளி நாடகப்பிரதிகளின் தொகுப்பு)

எஸ்.ரி.குமரன்
எஸ்.ரி.அருள்குமரன்

வெளியீடு:
**புத்தாக்க அரங்க இயக்கம்**
அரச பதிவிலக்கம் : CD/03/09/01/02/JAF/003
கோவில் வீதி,
மல்லாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூல் | - | பண்படு (தெருவெளி நாடகப்பிரதிகளின் தொகுப்பு) |
| ஆசிரியர்கள் | - | எஸ்.ரி.குமரன், எஸ்.ரி.அருள்குமரன் |
| உரிமை | - | ஆசிரியர்களுக்கு |
| பதிப்பு | - | கார்த்திகை 2016 |
| பக்கங்கள் | - | 60 |
| அளவு | - | A5 |
| பிரதிகள் | - | 500 |
| ISBN | - | 978-955-43186-0-1 |
| விலை | - | 250/= |
| அச்சுப்பதிப்பு | - | சிகேஜே பிறிண்ட் கிறபிக்ஸ் |
| வெளியீடு | - | புத்தாக்க அரங்க இயக்கம் |

| | | |
|---|---|---|
| Title | - | PANPADU |
| Author's | - | S.T.Kumaran, S.T.Arulkumaran |
| Copy Right | - | Author's |
| First Edition | - | Nov 2016 |
| Pages's | - | 60 |
| Size | - | A5 |
| Copy's | - | 500 |
| ISBN | - | 978 - 955 - 43186 - 0 - 1 |
| Price | - | 250/= |
| Printers | - | CKJ Print Grafix |
| Published By | - | Innovative Theatre movement |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அமரர்கள்

அப்பு!!

சித்த வைத்திய கலாநிதி

கோவிந்தர் சின்னத்தம்பி,

அம்மம்மா!!

சின்னத்தம்பி-அசுபதி

அவர்களிற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

எனது எழுத்துக்களை இங்கே பதியும் போது ஓர் இனம் புரியாத பெருமையும் புளகாங்கிதமும் நெஞ்சில் பரவுகின்றது. போர் நெருக்கடிமிகுந்த உயிர் அச்சுறுத்தல் மிக்க யாழ்ப்பாணத்தின் 2006 காலப்பகுதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எனக்கு அறிமுகமானவர்கள் குமரன், அருள்குமரன் சகோதரர்கள். சகோதர பீடத்தில் கல்வி கற்ற அவர்களின் நட்புணர்வுமிக்க வார்த்தைகள் உள நெருக்கடிகளுக்குள் சிக்கிய வேளைகளில் வல்லமை தருபனவாகவும் ஆறுதல் தருவனாகவும் அமைந்திருந்தன. அவர்களின் சிந்தனைகளும் எனது சிந்தனைகளும் ஒரே நேர்கோட்டில் பயணிப்பதாக இருந்ததை அன்று உணர்ந்து அதனை இன்று வரை அனுபவித்து வருகின்றேன்.

மற்றவர் மனதறிந்து நடக்கும் மாண்பையும், உற்றவர் தேவையறிந்து உதவும் பண்பையும், கற்றவர்கள் காமுறும் திறனையும் அவர்கள் எப்படிப் பெற்றார்கள் என சிந்திக்கும் வேளையில் தான் அவர்களுக்குள் ஆழ வேரூன்றியிருக்கும் கலையுணர்வை அடையாளம் கண்டு கொண்டேன். நாடகமும் அரங்கியலும் துறையில் சிறப்புப் பட்டங்களைப் பெற்று தாம் பெற்ற பட்டத்தின் பயனாக நாடகத்துறை ஆசிரியர்களாக இணைந்து அவர்கள் ஆற்றும் கலைப்பணி என்பது ஓர் காலப்பணி. திசைமாறும் நம் இளைய சமூகத்தில் திறனுள்ள இளைஞர்களும் உள்ளார்கள் என்பதை உணர்த்தும் அவர்களின் வல்லமைகளின் வழி நம் சமூகம் நிமிர்வு பெறுகின்றது.

தாங்கள் கற்பிக்கும் பாடசாலைகளில் மாணவர்கள் மத்தியில் நாடக ஆர்வத்தை வளர்ப்பதோடு நின்று விடாது எவ்வெவ் விடயங்களில் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டுமோ அவ்வவ் விடயங்களில் தம் கவனத்தை குவித்து கதைக் கருக்களை உருவாக்கி அவற்றுக்கு நாடக வடிவம் கொடுத்து அவர்கள் ஆற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணி காலத்தால் நினைவு கூரத்தக்கது. போதையின் பாதையில் செல்லும் தலைமுறையை பின்னின்று இழுத்து புத்தி சொல்வதாகவும் வாசிப்பு பழக்கத்தை தொலைக்கும் சமூகத்துக்கு வாசிப்பின் தேவையை இடித்துரைப்பதாகவும் குடும்ப வன்முறையால் தவிக்கும் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் கரம் கொடுப்பதாகவும் அவர்கள் அமைத்து அரங்கேற்றிய பல சமூக விழிப்புணர்வு நாடகங்களை பார்த்து பாராட்டிய பலருள் நானும் ஒருவன்.

இன்று அவர்கள் அரங்குகளில் ஆற்றுகை செய்த நாடகங்களை எழுத்துப் பிரதியாக நூல் வடிவாக்கும் போது அவர்கள் நண்பன் எனும் பெருமை மேலும் எனக்கு கௌரவம் சேர்க்கின்றது. எனது அளவெட்டிக் கிராமத்தில் பிரதி பூரணை தினங்களிலும் நிலாக்காலம் எனும் கலையாற்றுகையை மகாஜன சபை கலைஞர் வட்டத்தினூடாக ஆற்றிய போது அதில் குமரன், அருள்குமரன் சகோதரர்களின் பங்களிப்பு அளப்பரியது. எமது கலைஞர் வட்டத்தின் நாடகத்துறை இணைப்பாளர்களாக இருந்து பல நாடகங்களை மேடையேற்றியவர்கள்.

தேசிய மட்டத்தில் நாடகத்துறைக்கான பல விருதுகளைப் பெற்று நமது கலைஞர் வட்டத்துக்கு பெருமை சேர்த்தவர்கள். இன்று "பண்படு" எனும் தலைப்பில் அவர்கள் வெளிக்கொணரும் இவ் நாடகப் பிரதி நூல் தங்கள் அறிவை சமூகவல்லமையாக மாற்றும் அவர்களின் பெருந்தன்மைக்கு சான்று. நாடகப் பிரதிகள் எழுத்து வடிவில் வரும் போது மற்றவர்களும் அவற்றை நடித்து பயன்பெற வழியுண்டு. இக் கருமத்தை ஆற்றும் குமரன், அருள்குமரன் சகோதரர்கள் தங்கள் வெளியீட்டு முயற்சிகளிலும் வெற்றி பெற்று நிமிர நட்புணர்வுடன் வாழ்த்தி மகிழ்கின்றேன்.

**இ.சர்வேஸ்வரா**
செயலாளர்
மகாஜன சபை கலைஞர் வட்டம் - அளவெட்டி
உதவிப் பதிவாளர்
மருத்துவபீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரங்க நுழைவாயிலில்........

அரங்கிற்கான கதையாடல் வெளிகள் பல. அவ்வெளிகளின் ஊடுவெளியின் ஊடாக பார்ப்போருடன் அரங்காடி தொடர்பு கொள்கின்றான். இத்தொடர்பாடல் மூலம் சமூக அசைவியக்கத்தில் மாற்றத்தினை கொண்டு வருகின்றன.

இப்பகைப்புலத்தில் தெருவெளி ஆற்றுகைகளுக்கான வெளியென்பது வித்தியாசமானது. ஏனைய ஆற்றுகைகளுடன் பார்ப்போர் கொண்டுள்ள உறவினை விட இவ்வரங்கு கொண்டுள்ள உறவு நெருக்கமானது. இவ் நெருக்கம் பல்வேறு தளத்தில் உயிர்ப்பானதாகும்.

இத்தளவெளியில் இங்கே கதையாடப்படுகின்ற ஆற்றுகைக்கான பிரதிகள் அளிக்கை நிலையில் பார்ப்போரிடையேயும் சமூகப் பெறுமானத்திலும் பல அசைவியக்கங்களினை ஏற்படுத்தியவையாகும்.

ரசிப்புத்தளத்தில் இருந்து வாசக நிலைக்கு கொண்டு வருவதுடன் ஆவணப்படுத்துகின்ற முயற்ச்சியாகவும் இப்பிரதிகளது வெளியீடுகள் காணப்படுகின்றது. குறிப்பாக ஈழத்தமிழ் அரங்கினை பொறுத்தவரையில் எழுத்துப்பிரதிகளுக்கு வறுமையுள்ளதாக பலரும் கருத்துப் பகிர்கின்ற போதும் அவற்றினை நிவர்த்தி செய்வதற்கான செயற்ப்பாடுகள் குறைவாக உள்ளன.
இப் பகைப்புலத்தில் தெருவெளி ஆற்றுகைளிற்கான பிரதிகளின் தொகுப்பாக வெளியிடப்படுகின்றது.

அறிமுக குறிப்பினை எழுதியதுடன் எமது வளர்ச்சியில் ஆரம்ப காலம் முதல் நட்புறவுடன் அக்கறைகாட்டி வருகின்ற கிளிநொச்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் மதிப்பிற்குரிய திரு சு.ஸ்ரீகுமரன் (இயல்வாணன்) அவர்களுக்கும் நன்றிகள்!

வாழ்த்துரையினை தந்த பல்கலைக்கழக நண்பன் இ.சர்வேஸ்வரா நாம் முகவரி தேடியலைந்த போது முகவரி பெற்றுத்தந்தவர்களில் ஒருவர் அவரிற்கு எமது நட்பினை பகிர்ந்து கொள்கின்றோம்.

வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றார்கள் எனும் ஆற்றுகையினை மேற்கொள்வதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்ததுடன் ஆலோசனைகளையும் வழங்கி வழிகாட்டிய பிரபா அண்ணாவிற்கும் நன்றிகள்.

பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் நிதி அனுசரணை திட்டத்தின் எழுத்தாளர் ஊக்குவிப்பு திட்டத்தின் மூலம் இந் நூலினை வெளியீடுவதற்குரிய வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்த தெல்லிப்பளை பிரதேச கலாசார உத்தியோகத்தர் திருமதி பத்மராணி சிவஞானராஜா, பிரதேச செயலர் க.ஸ்ரீமோகனன் ஆகியோருக்கும் நன்றிகள்.

அரங்கச் செயற்பாடுகளின் போது பக்கபலமாக இருந்தவர்கள் எனும் வகையில் ஓய்வுநிலை நூலக க. சௌந்தரராஜன் ஐயா, சிதம்பரதிருச்செந்திநாதன், பகிரதி கணேசதுரை, ச.கிருபானந்தன், வே.சிவராஜா, கலாசார உத்தியோகத்தர்கள் தாட்சாயினி, நிருபா, மாலினி, கு.ரஜீவன் மற்றும் ம.ஜெயகாந்தன், சொ.ஹரிசங்கர்,நா.கு.மகிழ்ச்சிகரன், சி.ரமேஸ் எங்களின் நாடக ஆசான் திரு க.ஸ்ரீகந்தவேள் ஆகியோருக்கும் நன்றிகள்.

இவ்வாற்றுகைகளிற்கான நிகழ்த்துகைகளிற்குரிய வாய்ப்புக்களினை ஏற்படுத்தி தந்த இணுவில் பொது நூலகத்தினர், தெல்லிப்பழைபிரதேசசெயலகத்தினர், சண்டிலிப்பாய்பிரதேசசெயலக கலாசரப்பிரிவினர், சங்கானைபிரதேசசெயலக கலாசார பிரிவினர், வேல்விஷன் நிறுவனத்தினர், காத்திரமான வகையில் அளிக்கையினை மேற்கொண்ட ஆற்றுகையாளர்கள் நன்றிக்குரியவர்கள்.

சிறந்த முறையில் அச்சுப் பதித்து தந்த சிகேஜே பிறிண்ட் கிறபிக்ஸ் நிறுவனத்தினருக்கும் எமது நன்றிகள்.

*எஸ்.ரி.குமரன்*
BA(Hons) MA (Distinction), Dip in EM, Dip .in..psy ,PGDE (Merit)

நாடகத்துறை ஆசிரியர்
யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
(தேசிய பாடசாலை)
பணிப்பாளர்

*எஸ்.ரி.அருள்குமரன்*
BA(Hons) MA(Merit) ,Dip in.EM, Dip .in .psy, PGDE.

நாடகத்துறை ஆசிரியர்
யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி
(தேசிய பாடசாலை)
நிர்வாக பணிப்பாளர்

**புத்தாக்க அரங்க இயக்கம் (ஐ.ரி.எம்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

1. பண்படு - 01

2.வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்- 20

3. நாளைய தலைவர்கள் - 34

4. வாழ்வதற்கு - 45

5. கருகும் மொட்டுக்கள் - 52

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்படு (எங்களின் கதைகள்)

கலாசார விழிப்புணர்வினை ஏற்படுத்தும் முகமாக புத்தாக்க அரங்க இயக்க கலைஞர்களினால் வலி. வடக்கு தெல்லிப்பழை கலாசாரப் பேரவை, வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசாரப்பேரவை வலி. மேற்கு சங்கானை பிரதேச செயலக கலாசாரப்பேரவை ஆகியவற்றின் ஏற்பாட்டில் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பாடசாலைகள், கிராமங்களில் ஆற்றுகை செய்யப்பட்டது.

வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேசசெயலர் பிரிவில் மல்லாகம் பழம்பதி தேவஸ்தான முன்றல் கட்டுவன்புலம் மகாவித்தியாலயம், அளவெட்டி பாரதி சனசமூகநிலையம், தந்தை செல்வாபுரம், பட்டிக்கடவை போன்ற பகுதிகளிலும் வலி. மேற்கு சங்கானை பிரதேச செயலர் பிரிவில் சுழிபுரம் ஐக்கியசங்கம், பல்லசுட்டி, அராலி ஊறத்தி போன்ற பகுதிகளிலும் வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பாடசாலைகளான பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப்பாடசாலை, பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி/மாதகல் சென்யோசப் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலும், கரவெட்டி பிரதேச செயலகத்தில் பிரதேசசெயலக மண்டபத்திலும் ஆற்றுகை செய்யப்பட்டது.

மேலும் வலிதெற்கு பிரதேசசபை வருடாந்த ஒன்றுகூடல் விழா, மானிப்பாய் புதுமடம் கர்த்தர் ஆலய ஒளிவிழா , அளவெட்டி சூசையப்பர் ஆலய ஒளிவிழா நிகழ்வு, இணுவில் மஞ்சத்தடி பாலர் பாடசாலையின் கலைநிகழ்வு வலி. வடக்கு கலாசாரப்பேரவையின் கலை விழா, இணுவில் காரைக்கால் சிவன் மகா சிவராத்திரி விழா, சங்கானை வைரவர் ஆலய உற்சவம். ஆகியவற்றிலும் ஆற்றுகை செய்யப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாற்றுகையின் ஆற்றுகையாளர்களாக யே.சானுஜன், சு.கலைக்ஸன், ச.குபேரன், தி.திஸ்னுகன், உ.கரிஸ், நா.மோகனராஜன், இ.இந்துஜன், பா.ஜெயரூபன், தி.தனுஜன், அ.சதீஸன், சி.சஞ்ஜீவன், செ.அகிலன்,தி.திலக்ஸன், பா.தாருசன், பு.தக்சாந் ஆகியோர் செயற்பட்டார்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாடு

## *காட்சி - I*

தனனானே தானேதானானே தனத் தான னானனே
தனனானே தனேதானானே தனத் தான னானனே
தனனானே தனேதானானே தனத் தான னானனே

(தனனானே தனேதானானே... என்ற தாளக்கட்டுடன் கூடிய வகையில் பாடலினை பாடிய படி வட்ட வடிவமாக ஆற்றுகையாளர்கள் அரங்கினுள் நுழைவர்.)

ஒருவர் - ஆண்றோர்கள் சான்றோர்கள் பிறந்த நிலம்
மற்றவர் - நல்லவர் நடந்த தரை
ஒருவர் - நாமெல்லாம் வாழ்ந்த நிலம்
ஒருவர் - பயன் தரு நிலமும் நல் நீர் நிலமும்
மற்றவர் - ஆண்மீகமும் மொழியும்
ஒருவர் - பண்பாடும் ஒழுக்கமும் விளைந்த நிலம்
மற்றவர் - கலையும் வாழ்வும் இணைந்ததாய் இருந்தது.
ஒருவர் - எங்கள் யாழ்.மண்
எல்லோரும் - எங்கள் யாழ்.மண்

(இவ்வாறு முடிவடையும் போது தனனானே, தானேதனானே பாடல் இடம்பெறும் எல்லோரும் வட்டமாக அரங்கினுள் பிரவேசித்து அமர்வர் அவ்வேளை ஒவ்வொருவராக உரையாடலில் ஈடுபடுவர்)

பாத்திரம் 1 : எங்கட மொழி பண்பாடு கலாசாரத்தை பாதுகாக்க வேண்டும்

பாத்திரம் 2 : கலாசாரம் தான் எங்கட மூச்சு

பாத்திரம் 3 : கல்வியால தான் எங்கட இலக்கை அடையலாம்

பாத்திரம் 4 : நாமெக்கென வாழாய் பிறர்க்குமாய் வாழ்வோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாத்திரம் 5 : கலாசாரத்தை இழக்கிறது எங்கட வாழ்க்கையை இழக்கிற மாதிரி

பாத்திரம் 6 : அறிவியல் வளர்ச்சி எம்மை ஆளவே தவிர எம்மை அழிப்பதற்க்கல்ல

பாத்திரம் 7 : இன்றைய இளைஞர்களே நாளைய உலகை ஆழ்பவர்கள்

பாத்திரம் 8 : கல்வி தான் எங்கட மூச்சு

பாத்திரம் 9 : கற்ப்பெனப்படுவது சொற்திறம் பாவை

பாத்திரம் 10 : ஒழுக்கம் சமூகத்தின் கண்கள்

பாத்திரம் 1 : சுத்தம் சுகம் தரும் இது ஆன்றோர் வாக்கு

பாத்திரம்11 : குடி குடியை கெடுக்கும்

பாத்திரம் 12 : பெண்களினது ஒழுக்கம் நம் நாட்டின் ஒழுக்கம்

பாத்திரம் 13 : சிறுவர்கள் நாளைய நாட்டின் தலைவர்கள்

பாத்திரம் 14 : சிறுவர்களுக்கு எதிரான அடக்குமுறைகளை உடைத்தெறிவோம்

(இவ்வாறு ஒவ்வொருவரும் வந்தும் உரையாடல் நிறைவுக்கு வரும் போது)

ஒருவர் - இதெல்லாம் தான் எங்கட சமூகத்தின்ர அடையாளங்கள் ஆனால் இது எப்படி யெல்லாம் மாறிப்போறதால தான் சீரழிவுகளை சந்திக்கிறம் அந்த சீரழிவுகளை நீங்களும் பாருங்கோவன்

எல்லோரும் - நீங்களே பாருங்கோ... சிரிக்கிறதோட மட்டும்.... நில்லாதேங்கோ.... , சிந்தியுங்கோ.....! அனைவரும் தனனானே தனேதானானே .... பாடலுடன்அரங்க வெளியை விட்டு வெளியேறுவர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி - II

(பிள்ளை படிப்பது போலவும் தாய் அருகில் இருப்பது போலவும் உறை நிலையில் நிற்பர் குடிகாரர்கள் இருவர் பிரவேசிப்பர்)

குடிகாரன் 1 - மச்சான் உழைச்சது ஆயிரம்

மற்றவன் - குடிச்சது எண்ணூறு

குடிகாரன்1 - மிச்சம் இருநூறு இருக்கு

மற்றவன் - அது நாளைக்கு

குடிகாரன்1 - யாற்றா...... என்ர கதைக்கு எதிர்கதை கதைக்கிறது

மற்றவர் - யாற்றா........ என்ர கதைக்கு எதிர்கதை கதைக்கிறது

குடிகாரன் 1 - டேய் நீ முன்னாலை வாடா

மற்றவர் - டேய் நீ முன்னாலை வாடா

(இருவரும் சுற்றி வரல் இருவரும் முட்டுப்படல் ஒருவரை ஒருவர் திரும்பிப்பார்ப்பர் இவரும் கை கொடுத்து விழுவர்)

குடிகாரன் 1 - அட மச்சான் நீயோ...

மற்றவர் - அட மச்சான் நீயே.....

குடிகாரன் 1 - என்ன இங்கால...

மற்றவர் - சும்மா குடிப்பமென்டு....

குடிகாரான்1 - மச்சான் வரட்டே போட்டு

மற்றவர் - ஓம்.. (சிறிது தூரம் சென்ற பின்) மச்சான் உனக்கு பயமா இல்ல... நான் வாறன் உன்னை கூட்டிக்கொண்டு போய் விட

(இருவரும் வீடு நோக்கி செல்லல்)

மற்றவன் - மச்சான் வரட்டே போட்டு

குடிகாரன்1 - ஓம்.. மச்சான்... (சிறிது தூரம் சென்றபின் மச்சான் உனக்கு பயமா இல்ல... நான் வாறன் கூட்டிக்கொண்டு போய் விட (கூட்டிக் கொண்டே வீட்டடியில் விடுவர்)

மற்றவன் - மச்சான் வரட்டே போட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவன் - ஓம்.. (சிறிது தூரம் சென்ற பின்) மச்சான் உனக்கு பயமா இல்ல... நான் வாறன் கூட்டிக்கொண்டு போய் விட (கூட்டிக் கொண்டே வீட்டடியில் விடுவர்)

குடிகாரன்1 - ஓம்.. (சிறிது தூரம் சென்ற பின்) மச்சான் உனக்கு பயமா இல்ல... நான் வாறன் கூட்டிக்கொண்டு போய் விட (மற்றவர் உரையாடிய படி கீழே விழுவர்)

குடிகாரன்1 - மச்சான் வரட்டே போட்டு
(வீட்டிற்குள் செல்வர் இவ்வேளையில்)

மனைவி - இந்தால் வேலைக்கு எண்டு போனவர் இன்னும் காணேலை. வேலைக்குப்போறன் வேலைக்குப்போறன் என்டு குடிச்சு அழிக்குது வீட்டைப் பற்றிச் சிந்தனை இல்லை (மகனைப் பார்த்து) தம்பி நீ படியன...

(மகன் படித்துக் கொண்டு இருப்பதனை கண்டு குடிகார தந்தை அடித்தல், கலைத்தல்)

குடிகாரன் - மைடியர் சண் கோயிங் ரூ சிலீப்பிங்

மனைவி - அவனுக்கு சோதினை இருக்காம் அதோட ரீச்சரும் வீட்டு வேலை குடுத்தவாவாம் அவனைப்படிக்க விடுங்கோ

குடிகாரன் 1 - நேரம் பத்தரை ஆகுது இவனுக்கு என்ன படிப்பு வேண்டிக்கிடக்கு (மகனை அடித்தல்) போய் படடா .... (பார்வையாளரை நோக்கி) நாங்கள் அந்தக் காலத்தில படிக்காத படிப்பே படிக்கிறாய்

மற்றவர் - (வீழ்திருந்தவர் எழுந்து) அது தானே அந்தக் காலத்திலை நாங்களெல்லாம் ரீச்சர் அ போ.... டென்டா

குடிகாரன்1 - ஆ....வண்ணா போடுவம்..

மற்றவன் - நாங்கள் அந்தக்காலத்தில எட்டாம் கிளஸ்

குடிகாரன் - பாஸோ மச்சான்...

மற்றவன் - இல்லை பெயிலட....

குடிகாரன் - அது தான் எங்களுக்கு வேணும் (மகனையும் மனைவியும் அடித்தல்) படிப்பை விட்டுட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய் பட்டா... (மற்றவரிடம் சென்று) அதை விடு மச்சான் இவங்களோட கதைச்சதிலை அடிச்சது எல்லாம் இறங்கிப்போச்சு வா இன்னொருக்கா போட்டு வருவம்....

மற்றவர் - 200 கிடக்குது

குடிகாரன் 1 - அது என்னத்தை காணும் பொறு பெடியன்ர பள்ளிக்கூட துணி கிடக்குது அதை எடுத்துக்கொண்டு வாறன் வித்துப்போட்டு குடிப்பம்...

மனைவி - ஐயோ..... அது பெடியன்ர பள்ளிக்கூடத்தில உடுப்புத்தைக்க குடுத்தது பள்ளிக்கூடத்தில பேசுவினம்

குடிகாரன் 1 - விடடி... (மனைவியை அடித்தல்)

பெடியன் - அப்பா அம்மாவை வேனுமெண்டா அடியுங்கோ என்ர துணியை தாங்கோ... உடுப்பு தைச்சுப்போடாட்டி ரீச்சர் அடிப்பா

(இருவரையும் தள்ளி விட்டு துணியை எடுத்துச்செல்லல்)

மற்றவன் - சரி மச்சான் போவமே

குடிகாரன் - வா போவம் (மற்றவன் காலினை பிடித்தல்)

மற்றவன் - மச்சான் காலடா..

குடிகாரன் - அரையே அடிக்கலாம் காலைப் பற்றி கதைக்கிறாய்.

மற்றவன் - அடே என்ர காலை சொன்னனான்

குடிகாரன் - சரி மச்சான் வா போவம் (இருவரும் வெளியேறுகின்றனர்)

எடுத்துரைஞர் - குடியால் சீரழிந்து போகும் வாழ்கை இளம் வயதில் சாவினை சந்திக்கின்றனர். இன்பங்கள் தொலைத்து துன்பத்தில் மூழ்குகின்றனர். எத்தனையோ குடிகள் அழிந்தன குடியால். குடியால் குடும்பங்கள் அழிந்து அவலத்தில் இருக்கின்றன. இதற்கு மாற்றம் இல்லையேல் அழிந்து போகும் எமது சமூகம் சிந்தியுங்கோ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்

**குடித்து அழிந்தவர் சரித்திரம் படித்தாயோ – உயிர்**
**எடுக்கும் மதுவின் கதைகள் அறிவாயோ**
**இளமை துறந்து முதியவன் ஆவாயோ**
**ஈனக்குரலில் ஊளையும் இடுவாயோ**

(பாடல் பா.ஜெயரூபன்)

## *காட்சி* - III

### *இன்ரனெட் காட்சி*

(இளைஞர்கள் வரல்)

ஒருவன் - எங்க ஒருத்தரையும் கானேல்ல....(நான் திசையும் பார்த்தல்) அட அங்க வாறான்

(ஒவ்வொருவராக ஐந்து இளைஞர்கள் வருகை தந்து மகிழ்வை வெளிப்படுத்துவர்)

ஒருவன் - எங்க காசை தாங்கோடா
மற்றவர் 1 - டேய் 200 ரூபாவுக்கு 50 குறையுது
ஒருவன் - பரவாயில்ல
மற்றவர் 2 - 300ருபாவுக்கு 50 குறையுது
மற்றவர் 3 - 100 ரூபாவுக்கு 90 ரூபா குறையுது...
மற்றவர் 4 - 10 ரூபாவுக்கு 9 ரூபா குறையுது...
ஒருவர் - சரி தாங்கோடா...சரி... போவமே...( ஐவரும் வட்டமாக ஆடியபடி பாடலை பாடிக்கொண்டு செல்வர்)

பாடல்

**இன்ரனெற்றை தேடியேல்லோ இளைஞர்கூட்டம் நாங்கள்**
**இப்போ அதி சுறுக்கா போறோமேல்லே நெற்கபேயை நாடி** (2)

(பாடல் எஸ்.ரி அருள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவன் - (இளைஞர்களை வழி மறித்து) அண்ணை அண்ணை பள்ளிக்கூடமே போறியள்

இளைஞர்கள் - (சிறுவனைப்பார்த்து சிரித்து) பள்ளிக்கூடமோ? (வட்டமாக ஆடியபடி)

பாடல்

**பள்ளிக்கூடம் போனதெல்லாம் அந்தக்காலம்**
**இப்போ நெற்கபேக்கு போறதெல்லோ இந்தக் காலம்** (2)

(எஸ்.ரி அருள்)

சிறுவன் - (வழி மறித்து) அங்க போய்..

ஒருவன் - காலை எழுந்தாவுடன் பேஸ்புக்

மற்றவவர்1 - பின்பு கனிவு கொடுக்கும் நல்ல யு ரியுப்

மற்றவர் 2 - மாலை முழுவதும் சற்றிங்

மற்றவர் 3 - அதாவது அரட்டை அடித்தல்

இளைஞர்கள் - தம்பி எங்களோட வந்தி எண்டா நாங்கள் சொர்க்கத்தை காட்டுவம். வாறியோ...

மற்றவர் 1 - அங்க எல்லாம் கிடக்கு வா காட்டுறம்

சிறுவன் - நான் வரேல்ல.. நான் படிக்கப்போறன்...

இளைஞர்கள் - இவனோட கதைக்க எங்களுக்கு நேரம் இல்லை வாடா நாங்கள் போவம் (வெளியேறுகின்றனர்

சிறுவன் - ( பார்வையாளரை பார்த்து) நீங்களும் இவயளை போலவே. இப்பிடி யெல்லாம் செய்யிறனியள். இவையளைப் போல ஒன்டும் செய்யாமல் நீங்கள் ஒழுங்கா பள்ளிக்கூடம் போய் படிக்க வேனும் என்ன....

எடுத்துரைஞர் - இணையங்கள் சமூகத்தை ஆக்கவே தவிர அழிப்பதற்க்கல்ல. இணையத்தை நல்ல விடயத்திற்காக பயன்படுத்துவோம். அறிவியலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தி அழகியதோர் சமூகத்தை அமைப்போம்
நாங்கள் அழகியதோர் சமூகத்தை படைப்போம்.

பாடல்

**உலகை சுருக்கி கைகளில் தந்தது இணையத்தளமாகும்**
**வலைப்பின்னலில் அசுரச்சாதனை புரிவது புதிய மரபாகும்**
**மலையின் வளர்ச்சியில் சிறிய தீமையும் காய்ந்து சருகாகும்**
**கனவு மெய்ப்படும் புதியசாதனை மனிதன் வசமாகும்**

(பாடல் பா.ஜெயரூபன்)

## *காட்சி* - IV

(சிறுவனை வேலைக்கு சேர்த்தல்)

தந்தை - (மகனை கையில் இழுத்த படி ) வாடா ... வாடா...

மகன் - அப்பா நான் படிக்க போறன்

தந்தை - படிச்சு.....

மகன் - பெரியாள வறப்போறன்

தந்தை - பெரியாள வந்து.....

மகன் - வேலைக்கு போகப்போறன்

தந்தை - அதைத்தான் அப்பன் நான் இப்ப செய்யிறன் வாடா .. சத்தம் போடாமல்...(முதலாளி வருகை தரல்)

பாடல்

**வாறாராம் வாறாராம் முதலாளி வாறாராம்...**
**வாறாராம் வாறாராம் முதலாளி வாறாராம்...**

தந்தை - (முதலாளியை வணங்கி) முதலாளி இவன் சிங்கத்துக்குப் பிறந்த சிறுத்தை சேர்...

முதலாளி - அப்ப அவனை சூவில கொண்டே விடன் இஞ்ச ஏன் கொண்டந்தனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை - இவன் என்ர பெடியன் வேலைக்கு... வேலை வேணும் சேர்

முதலாளி - என்ன சின்னப் பெடியனா இருக்கிறான்...

தந்தை - இவன் நல்லா வேலை செய்வன் எதை குடுத்தலும் செய்வான்

மகன் - நான் ஒரு வேலையும் செய்யமாட்டன்.... இரண்டு வேலையும் செய்ய மாட்டன்..

தந்தை - டேய் சத்தம் போடக்கூடாது .. அப்பனுக்கு முன்னால மகன் திருப்பிக் கதைக்கக் கூடாது...

(முதலாளியை பார்த்து) முதலாளி எனக்கு குடிக்க மட்டும் தந்தா சரி

முதலாளி - சரி (மகனைப் பார்த்து) டேய் போய் வேலையைப்பாரடா...

தந்தை - முதலாளி அப்ப நான் போட்டு வரட்டோ... (சிரித்தல்)

முதலாளி - வந்திடுவாங்கள் என்ன.... இந்தா பிடி.. (காசைக் குடுத்து விட்டு வெளியேறுதல்)

தந்தை - (மகனைப் பார்த்து) டேய் ஒழுங்கா வேலையைச் செய்து அப்பன்ரை மாணத்தைக் காப்பாற்ற வேணும்...

மகன் - டாடி.... என்னை கூட்டிக்கொண்டு போங்கோ.. நான் படிக்கப்போறன்.... டாடி.. டாடி..

தந்தை - டேய் என்னடா அப்பனுக்கு தாடி இல்லை எண்டு நக்கலடிக்கிறியே.. ஒழுங்கா வேலையைச் செய்யடா.. (தந்தை வெளியேறுதல்)

எடுத்துரைஞர் -சிறுவர்களின் உணர்வுகளினை புரிந்து அவர் உடல், உள ஆரோக்கியத்திற்காக உழைப்போம் சிறுவர்கள் வாழ்வு சிதைந்தால் எமது சமூகம் சிதைந்து விடும் சிறுவர்கள் உணர்விற்கு உயிர் கொடுப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *காட்சி* - V

(பெண்களை கிண்டல் செய்தல்)

பாத்திரம் 1 - மச்சான் ஒண்டையும் காணேல்ல

பாத்திரம் 2 - பொறு அவசரப்படாத... பொறு வரும் அதால உதால இதால வரும்...அவளவை படிப்புக் கன்னியள் படிப்பு முடியத்தான் வருவாலவை....

பாத்திரம் 3 - டேய் மச்சான் அங்க ஒண்டு வருது...

எல்லோரும் - ஓமடா மச்சான்... (பெண் பின்னால் செல்லல்)

பாத்திரம் 1 - நடையைப்... பார்க்க அன்னக்கிளி மாதிரி இருக்கு

பாத்திரம் 2 - மச்சான் போனில படத்தை எடுக்கட்டே ... (படம் எடுத்தல்) நடையில போணே சும்மா அதிருதடா.... (அனைவரும் பின்னால் செல்லும் போது பாத்திரம் 3 பாடலை பாடுவர்)

பாடல்

**ஐயோ அம்மா கடையில அரிசி விக்கிற விலையில**
**பெண்டுகள் போற போக்கில எட்டி பிடியடா...**

(அனைவரும் சேர்ந்து பாடியவர் வாயைப் பொத்துவர்)

அனைவரும் - என்னத்தையடா...

பாத்திரம் 3 - அவள் கொண்டையையடா....

பாத்திரம் 2 - கொண்டையையா...

அனைவரும் - நாங்கள் என்னவே நினைச்சிட்டம்.....

பாத்திரம் 1 - கொண்டையையே சொன்னனி சரி சரி அம்சமா தான் இருக்கு

பாத்திரம் 2 - உங்கட போன் நம்பரை தாங்கோ போன் நம்பர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிளீஸ்...

பெண் - (பெண் விகாரப்படுத்தப்பட்ட முறையில் நம்பரை சொல்லல்) சைவர் ஏழு ஏழு.. ஒண்டு...இரண்டு... மூண்டு.. நாலு...அஞ்சு...ஆறு.....ஏழு...எட்டு ..ஒன்பது..

(பாத்திரம் 2 பெண் சொல்ல சொல்ல காட்சி ரீதியாக சொல்லி ஒண்டு...இரண்டு...மூண்டு..நாலு... அஞ்சு...ஆறு.....ஏழு... எட்டு .. ஒன்பது.. என நம்பரை குறித்தல்)

பெண் - ஓகே பாய்....

பாத்திரம்1 - ஓகே பாய்.....

பாத்திரம் 3 - போண்... பண்ணிப் பார்ப்பம்... நம்பரை அடியடா...

பாத்திரம் 2 - கோல் போகுதடா...

பாத்திரம் 3 - அட... கஸ்ரமருடன் தொடர்பு கொள்ள இலக்கம் 7ஐ அழுத்தவும்.... ச்சாய்... ஏமாத்திப் போட்டாலடா....

அனைவரும் - ச்சாய் ...ஏமாத்திப் போட்டாலடா... (அனைவரும் வெளியேறுவர்)

## *காட்சி* - VI
## கோயில்

(பெடியன் ஒருவன் மம்மி மம்மி என்ற படி.. அழுது கொண்டு இருத்தல்)

ஒருவர் - ஏன்ரா அழுறாய்...

பெடியன் - மம்மி.. மம்மி.....மம்மி...

ஒருவர் - என்டா கோயிலில் வந்து அம்மி குளவி என்னுறாய் எங்கட வீட்ட வா எங்கட பெரிய அம்மியை தாறன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெடியன் - இல்லை (உரத்து) எங்கட மம்மி....

ஒருவர் - (யோசித்து விட்டு) என்னடா கிஸ்றியில ஏதும் டவுட் கேக்கிறானோ தெரியேல..
(பார்வையாளரை பார்த்து) உங்களுக்கு மம்மி யெண்டா என்னன்டு தெரியுமே (யோசித்துவிட்டு) ஓ... அட அம்மாவையே தேடுறாய்

பெடியன் - ஓம் எங்கட மம்மி .... மம்மி ....

ஒருவர் - டேய் கோயிலுக்கு வரேக்க அம்மான்ர சீலையில பிடிச்சுக்கொணடு வராதையன்....

பெடியன் - அம்மா சாறி கட்டேல....

ஒருவர் - அப்ப பாவடை சட்டையில எண்டாலும் எட்டி பிடிக்காதையன்....

பெடியன் - நான் எட்டி எட்டி பாத்தன் எட்டேல... ஓடிவந்து எட்டிப் பார்த்தன் அப்பவும் எட்டேல...

ஒருவர் - அப்ப. அம்மா உடுப்பு போடேல எண்டு சொல்லு..

பெடியன் - இல்லை அம்மா போட்டவா.... பாவாடை சட்டை போட்டவா....

ஒருவர் - அப்ப அம்மான்ரை கூந்தலை என்டாலும் எட்டிப்பிடிச்சிருக்கலாம் தானே...

பெடியன் - அம்மா அதையும் வெட்டிப்போட்டா...

ஒருவர் - (கோபத்துடன்) டேய் உங்கினேக்க உன்ர மம்மி நிப்பா போய் தேடுடா..

பெடியன் - மம்மி... மம்மி... (அழுத படி வெளியேறுவர்)

எடுத்துரைஞர் - கலாசாரம் எம்மிரு கண்கள் கண்களை இழந்தால் எம் வாழ்வு அஸ்தமனமாகி விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி - VII
(சுத்தம்)

ஒருவன் - (ஓடி வந்து) தம்பி...... (என உரத்து கூப்பிடுவர்)

மற்றவன் 1 - அண்ணை வந்திட்டன்......

மறறவன் 2 - அண்ணை நானும் வந்திட்டன்..... வந்துட்டன்.....

ஒருவன் - என்ன விளையாட்டு விளையாடுவம்

மற்றவன் 1 - மண்விளையாட்டு விளையாடுவம்.

மறறவன் 2 - வீடு கட்டி விளையாடுவம்

மற்றவன் 1 - போய் களிமண் அள்ளீட்டு வா... வீடு கட்டுவம்..
(அனைவரும் சேர்ந்து பாவனையில் வீடு கட்டுவார்கள் வீடு கட்டிய பிற்பாடு)

### பாடல்

**கட்டியாச்சு கட்டியாச்சு வீடு கட்டியாச்சு...**
**மணல் வீடு கட்டியாச்சு நாங்கள் வீடு கட்டியாச்சு...**
**மணல் வீடு கட்டியாச்சு..**

ஒருவன் - ஒரே பசியா கிடக்கு

மற்றவன் 1 - எனக்கும் தான். வா வீட்டை போய் சாப்பிடுவம்.

ஒருவன் - அம்மா பசிக்குது சாப்பாட்டை கொண்டு வான....

தாய் - கால் முகத்தை கழுவிப்போட்டு சுவாமியை கும்பிட்டிட்டு சாப்பிடுங்கோடா

மற்றவன் - அம்மா சுவாமி ஒரு இடமும் ஓடமாட்டார் சாப்பிட்டிட்டு கும்பிடலாம்.

ஒருவன் - பசியாக்கிடக்கு தம்பி அம்மான்ர கதையை விட்டிட்டு கெதியா சட்டி பானையோடை எடுத்துக்கொண்டு வாடா ( அடிபட்டு சாப்பிடல்)

தாய் - டேய் கை கால் முகம் கழுவினிங்களோடா..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகால் முகம் கழுவாட்டி வயித்துக்குள்ள புழு வரும்.

மற்றவன் - அது புழுவே. .... அண்ணா அண்டைக்கு நூடில்ஸை திண்டிட்டு சத்தி எடுக்கேக்க அம்மா பாத்திட்டா.

தாய் - போய் முகம், கை, காலை கழுவுங்கோடா (அடித்து கலைத்தல் அனைவரும் வெளியேறுதல்)

எடுத்துரைஞர் - (பார்வையாளரைப் பார்த்து) நீங்களும் உப்பிடியே செய்யிறனியள் சாப்பிட முதல் கையைக்கழுவ வேணும்... சாப்பிட்டாப்பிறகு வாயைக்கழுவ வேண்டும்... சுத்தம் தான் முக்கியம் சுத்தமாக இருந்தால் நோயில்லாமல் வாழலாம்.

## *காட்சி* - VIII
(பிறந்த நாள்)

தந்தை - தம்பி உன்ர பிறந்த நாள் நாளைக்கு. 3 நாள் கொண்டாட்டம் உனக்கு பள்ளிக்கூடம் 3 நாள் லீவு

மகன் - பள்ளிக்கூடம் போகாட்டி சேர் அடிப்பார்

தந்தை - நான் சொல்லுறன் பிறகு. உன்ரை சேரிட்ட ... தம்பி போய்... சித்தப்பாவை கூட்டிக் கொண்டு வா... (சித்தப்பாவிடம் செல்லல்)

சித்தப்பா - என்ன அண்ணா கூப்பிட்டனியே....

தந்தை - என்ர பெடியன்ர பிறந்த நாள்...

சித்தப்பா - என்ன பெடியன்ர பிறந்த நாளே

தந்தை - ஓம் பெடியன்ர பிறந்த நாள் .... பிறகென்ன அந்த மாதிரி கொண்டாடி விடுவம். இப்ப இவனுக்கு 12 ஆவது பிறந்த நாள்....12 அடியில 12 பொக்ஸ் பிடிக்கோனும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தப்பா - ஓம் அண்ண பொக்ஸ் பிடிக்கிற வேலையை நான் பாக்கிறன்

தந்தை - சரி நான் பெடியனை கூட்டிக்கொண்டு போய் உடுப்பு எடுத்துக்குடுத்து கூட்டிக்கொண்டு வாறன்...

சித்தப்பா - (பொக்ஸ் காரனிடம் சென்று) அண்ணையின்ர மகனுக்கு பிறந்த நாள்

பொக்ஸ்காரன் - அதுக்கென்ன

சித்தப்பா - 12 வயது 12 அடியில 12 பொக்ஸ் வேணும்

பொக்ஸ் காரர் - கொஞ்சம் சிலவாகும்...

சித்தப்பா - அதைப்பற்றி பிரச்சனை இல்லை எவ்வளவு சிலவெண்டாலும் அண்ணை பாத்துக்கொள்ளுவார். இப்ப பொக்ஸை கொண்டுவந்து பூட்டுறீங்களோ...

தந்தை - சரி எல்லாம் கொண்டு வந்தாச்சே... சரி அண்ணை வடிவாய் பூட்டுங்கோ... பாட்டெல்லாம் சும்மா கும்.. கும்.. என்டு இருக்கோனும்...

பொக்ஸ்காரர் - ஒன்டும் கவலைப்பட வேண்டாம்... பாட்டுப் போட்டா சும்மா அதிரும் அண்ணை...

சித்தப்பா - அண்ணை சிங்கம் டான்ஸை போடன்ன ...

(சத்தமாக பொக்ஸ் போடல் அனைவரும் பாடலுக்கு ஏற்ப ஆடுவார்கள்...அவ்வேளையில் ஒருவர் வரல்)

ஒருவர் - என்ன அண்ணை ஒரோ சத்தமா கிடக்குது வீட்டில வயசு போண ஆக்கள் இருக்கினம்... அதோட படிக்கிற பிள்ளையள் ..... படிக்கிறேலையே

தந்தை - யார் உங்களை படிக்க வேண்டாம் எண்டது.. எங்கட வீட்ட 3 நாள் கொண்டாட்டம் நாங்கள் பாட்டு போடுவம்.... டேய்... போடுறா பொக்ஸ்ஸை ... விரும்பினால் நின்டு ஆடிப்போட்டு சாப்பிட்டிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போங்கோ...

ஒருவர் - உங்களோடை கதைக்கேலாது....

சித்தப்பா - அண்ணை பாட்டை போடன்ன .... கூட்டண்ண....

(அனைவரும் ஆடுதல் மற்றவர் வருதல்)

மற்றவர் - எங்கட வீட்டில இருக்கேலாதாம் குறைச்சு போடுங்கோ ஏ எல் சோதினை எடுக்கிற பிள்ளையள் இருக்குதுகள்.... படிக்கேலாதாம்....

தந்தை - எங்கட வீட்டிலை பிலெவல் பிள்ளைகள் இருக்குதுகள்...

சித்தப்பா - எங்கட பெடியன்ர பிறந்த நாள் அந்த மாதிரி கொண்டாட வேணும் கனக்க கதைக்கிறாய். நீ மட்டும் உன்ர அம்மம்மா சாகேக்க பறையை அந்த அடி அடிச்சாய் நாங்கள் கேட்டனாங்களோ ... விரும்பினா வந்து சாப்பிட்டுட்டு போ.... 3 நாள் கொண்டாட்டம் நாங்கள் போடுவம்.... போடா இவன்ரை கதையை விட்டிட்டு போடன்ன பொக்ஸ்சை

( அனைவரும் ஆடுவார்கள்)

தந்தை - தம்பி ஆடிக்களைச்சுப் போட்டம் பின்னுக்கு போவமே....

பிள்ளைகள் - அப்பா நாங்களும் வரட்டுமே

தந்தை - டேய் நீங்கள் அம்மாட்ட போய் சாப்பிடுங்கோ... தம்பி வா நாங்கள் பின்னாலை போவம்..... பொக்ஸ்கார அண்ணை நீங்களும் வந்திட்டு போங்கோவன்.

(கூட்டி செல்லல் அனைவரும் வெளியேறுவார்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி - IX

(அனைவரும் ஆடியபடி மீளவும் அரங்கில் வட்டமாக இருப்பார்கள்)

பாத்திரம் 1 - எங்கட கலாசாரத்தை பேண வேண்டும்

பாத்திரம் 2 - எங்கட மொழியை காப்பாற்ற வேண்டும்

பாத்திரம் 3 - சிறுவர் உரிமையயை நிலை நாட்டவேண்டும்.

பாத்திரம் 4 - சிறுவர்களிற்கு எதிரான அடக்கு முறையினை உடைத்தெறிய வேண்டும்

பாத்திரம் 5 - எங்கடை பண்பாட்டைப் பேணிப்பாதுகாக்க வேண்டும்.

பாத்திரம் 6 - குடியை ஒழிக்க வேண்டும்.

பாத்திரம் 1 - பெண்களுக்கெதிரான அடக்கு முறைகளை நீக்க வேண்டும்.

ஒருவன் - எங்கட சமூகத்தில நடக்கிற கலாசார அழிவுகளை பார்த்த நீங்கள் தானே? எங்கட சமூகத்தின்ர அடையாளங்கள் அதுகளை மீறுற தாலதான் இந்த அழிவுகளைச் சந்திக்கின்றோம்... எங்கட சமூகம் இப்படியே போன யாராலையும் எங்களைக் காப்பாற்ற முடியாது.... இது பற்றி நாங்கள் ஒவ்வொருத்தரும் சிந்திக்க வேண்டும்
சிந்தியுங்கோ....

அனைவரும் - சிந்தியுங்கோ....

பாடல்

**தனனானே தனேதானானே தனத் தான னானனே**
**தனனானே தனேதானானே தனத் தான னானனே**
**தனனானே தனேதானானே தனத் தான னானனே**

(ஆடல் கோலத்துடன் வெளியேறுவர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகின்றான்

தேசிய வாசிப்பு மாத்தினை முன்னிட்டு இணுவில் பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாதச் செயற்றிட்டமாக 2012 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு யாழ் . மாவட்டப் பாடசாலைகள் தனியார் கல்வி நிலையங்கள் சனசமூக நிலையங்கள் பொது இடங்களில் இத் தெருவெளி ஆற்றுகை நிகழ்த்தப்பட்டது. 2012 ஆம் ஆண்டு இணுவில் பொது நூலக ஏற்பாட்டில் யாழ்.மாவட்டப் பாடசாலைகளான யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி (தேசியப்பாடசாலை) யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி (தேசியப்பாடசாலை) மானிப்பாய் இந்துக் கல்லூ ரி (தேசியப்பாடசாலை) இணுவில் இந்துக்கல்லூரி இணுவில் மத்திய கல்லூரி, மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, மானிப்பாய் மகளீர் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, ஆகிய பாடசாலைகளில் தேசிய வாசிப்பு மாத சிறப்பு ஆற்றுகையாக நிகழ்த்தப்பட்டது. இணுவில் பொது நூ லகத்தின் தேசிய வாசிப்பு மாத நிறைவு நாள் பரிசளிப்பு மற்றும் கலை நிகழ்வில் சிறப்பு ஆற்றுகையாக நிகழ்த்தப்பட்டதுடன் ஆற்றுகையாளர்களும், நெறியாளர்களும் இணுவில் பொது நூ லகத்தினரால் கௌரவிக்கப்பட்டார்கள்.

வலி.தெற்கு பிரதேசசபையின் தேசிய வாசிப்பு மாத நிறைவு நாள் நிகழ்வில் பிரதேசசபை மண்டபத்தில் சிறப்பு ஆற்றுகையாக ஆற்றுகை செய்யப்பட்டதுடன் நெறியாளர்கள் வலி தெற்கு பிரதேசசபைத் தவிசாளர் தி.பிரகாஷ் அவர்களினால் கௌரவிக்கப்பட்டார்கள்.

தொடர்நிலைச் செயற்பாடாக 2013 ஆம் ஆண்டு தேசியவாசிப்பு மாதச் செயற்றிட்டத்தில் சாவகச்சேரிப் பிரதேசசபையின் நாவற்குழி பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாதச் செயற்பாடாக புத்தாக்க அரங்க இயக்கக் கலைஞர்களினால் நாவற்குழி மகாவித்தியாலயம், நாவற்குழி அ.த.க.பாடசாலை, நாவற்குழி சகலகலாவல்லி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலும் நாவற்குழிச்சந்தி, தச்சந் தோப்புசந்தி, காந்தீஜி சனசமூக நிலையம், பிரதேச சந்தை ஆகிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடங்களில் ஆற்றுகை செய்யப்பட்டது.

2014 ஆம் ஆண்டு வலி.தெற்கு பிரதேசசபையின் சுன்னாகம் பொது நூலகத்தின் வாசிப்பினை ஊக்குவிக்கும் நடமாடும் நூலக செயற்பாட்டில் மயிலனி சைவமகாவித்தியாலயத்தில் ஆற்றுகை செய்யப்பட்டது. வலி.தெற்கு பிரதேசசபையின் உடுவில் ,சுன்னாகம் பொது நூலகங்களின் தேசிய வாசிப்பு மாத நிறைவு நாள் நிகழ்வில் சிறப்பு ஆற்றுகையாக ஆற்றுகை செய்யப்பட்டதுடன் புத்தாக்க அரங்க இயக்கத்தின் ஆற்றுகையாளர்கள் பிரதேசசபையின் பொது நூலகதினரால் கௌரவிக்கப்பட்டார்கள். இவ் தெரு வெளி ஆற்றுகையானது தொடர்ச்சியாக நான்காவது ஆண்டிலும் தனது ஆற்றுகைகப்பயணத்தினை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ் ஆற்றுகையின் ஆற்றுகையாளர்களாக கு.லோன்சன் , கு.தவேன்சன், ம.உ சாந்தன், ம.மகிந்தன், தயாநிசன், லிவீசனன் கவிராஜ், சுகிர்தன், அபிசேக் சாள்ஸ் செபஸ்ரியான், விதுர்சன் கணோஜன் சண்முகப்பிரியன், பெனற், சரன், ஆகியோர் பங்குபற்றியுள்ளனர்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகின்றான்

### *காட்சி* - I

(கூட்டினுள் படிப்பதற்காக ஒருவர் அடைத்து வைக்கப்பட்டிருப்பார் அக்கூட்டினைச்சுற்றி செயற்பாடுகள் இடம்பெறும்)

பாடல்

**தனனானே தனேதானானே தனத் தான னானனே**
**தனனானே தனேதானானே தனத் தான னானனே**
**தனனானே தனேதானானே தனத் தான னானனே**

(பாடலுடன் ஆடியபடி வட்டவடிவாக அரங்கினுள் பிரவேசிப்பார்கள்

நபர் 1 :- காலை எழுந்தவுடன் படிப்பு

நபர் 2 :- பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு

நபர் 3 :- மாலை முழுதும் விளையாட்டு

நபர் 4 :- என்று வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா

மகன் :- (கூட்டினுள் அடைத்து வைக்கப்பட்டவர் உரையாடலை ஆரம்பிப்பார்) எனக்கு படிக்கிறதுக்கு விருப்பம் ஆனால் படிப்பு என்டு சொல்லி என்னை கூண்டுக்குள்ள அடைச்சு வச்சு இருக்கினம் (2)

நபர் 2 :- கல்வி ஒரு மனிதனைப் பூரணமாக்கும் (3)

நபர் 1 :- கண்டதும் கற்றவன் பண்டிதன் ஆவான்(3)

நபர் 3 :- தோண்டத் தோண்டத்தான் கேணியில தண்ணீர் ஊறுற மாதிரி படிக்கப் படிக்கத்தான் அறிவு ஊறும்(3)

நபர் 4 :- உலகத்தில மனிதனுக்கு தேடல் அதிகம் ஆனால் எங்கட தேடலுக்கு ஏற்ற மாதிரி படிப்பு இருக்கா?.. (3)

நபர் 1 :- யார் யாரே தாங்கள் நினைச்சது எல்லாத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களிட்டை எல்லே திணிச்சிட்டு போகினம் (3)

நபர் 5 :- படிப்பு இப்ப இப்பிடித்தான் இருக்கு...

நபர் 1 :- காலையிலும் படிப்பு...

நபர் 2 :- பள்ளிக்கூடத்திலும் படிப்பு ..

நபர்6 :- ரீயூசனிலையும் படிப்பு ..

நபர் 3 :- மாலையிலும் படிப்பு ...

நபர் 4 :- இரவிலையும் படிப்பு ...

நபர் 6 :- அரைச்சமாவைத் திருப்பித் திருப்பி அரைக்கிற மாதிரி படிச்சதை எல்லே திருப்பித் திருப்பி படிக்கிறம் எல்லா இடத்திலையும் ஒண்டைத்தான் திருப்பித் திருப்பி படிக்கிறம்

நபர் 1 :- செக்கு மாடுகள் ஒண்டையே சுத்திச்சுத்தி வாறமாதிரி நாங்களும் ஒண்டையே சுத்திச்சுத்திவாறம்

நபர் 2 :- ஒரு புண்ணாக்கும் இல்லை.... விளங்குறதும் இல்லை.....

## பாடல்

**தனனானே தனேதானானே தனத் தான னானனே**
**தனனானே தனேதானானே தனத் தான னானனே**
**தனனானே தனேதானானே தனத் தான னானனே**

(பாடலுடன் வெளியேறுவர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி - II

(வாத்தியார் வருகை தரல்)

பாடல்

**தனன்ன னானா தனன்ன னானா தனன்னானா**
**தனன்ன னானா தனன்ன னானா தனன்னானா**
**வாறாராம் வாறாராம் வாத்தியாரு வாறாராம்**
**வாறாராம் வாறாராம் வாத்தியாரு வாறாராம்**
**வாறாராம் வாறாராம் வாத்தியாரு வாறாராம்**

(கூட்டைச் சுற்றி வாத்தியார் வருவார் அவரைப்பின் தொடர்ந்து கூண்டினுள் அடைக்கப்பட்ட மகனின் தந்தையர் பின்தொடர்ந்து ஓடுவார்) Sir , sir , sir , sir........ sir...... (வாத்தியர் சத்தம் செய்வேண்டாம் என்ற சைகையைக் காட்டியபடி கூட்டடிக்கு சென்று மகனை தனது தடியினால் தட்டி பரிசோதிப்பார்)

வாத்தியார் :- (சிரிச்சபடி) என்னட்ட நிறைய விற்றமின் குளிசைகள் கிடக்கு

தந்தை :- சேரிட்ட கிடக்காம்.... (சிரித்தபடி) நிறைய விற்றமின் குளிசை

வாத்தியார் :- 5 மணிக்கு 5 g science

தந்தை :- 5 மணிக்கு 5 g science ஆம்....

பாடல் :- 5 மணிக்கு 5 g science (3)

வாத்தியார் :- 8 மணிக்கு 10 g match (தந்தை மண்டையைச் சொறிதல்) கணிதம்.......கணிதம்...

தந்தை :- 8 மணிக்கு 10 g கணிதமாம்.....

பாடல் :- 8 மணிக்கு 10 g கணிதம் (3)

வாத்தியார் :- 11 மணிக்கு 14 g வரலாறு

தந்தை :- 11 மணிக்கு 14 g வரலாறாம்.....

பாடல் :- 11 மணிக்கு 14 g வரலாறு (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாத்தியார் :- 2 மணிக்கு 40 g . பெடியன் பாவம் களைச்சுப் போடுவான் ஒரு 4 g இங்கிலீசு

தந்தை :- 2 மணிக்கு 4 g இங்கிலிசாம்.....

பாடல் :- 2 மணிக்கு 4 g இங்கிலீசு (3)

வாத்தியார் :- 5 மணிக்கு 18 g சமயம்

தந்தை :- 5 மணிக்கு 18 g சமயமாம்....

பாடல் :- 5 மணிக்கு 18 g சமயம் (3)

வாத்தியார் :- நான் தந்த விற்றமின் குளிசையளை ஒழுங்கா நேரத்துக்கு பெடியனுக்கு போட்டியல் என்டால் பெடியன் முழுசாய் குணமாவான்.... பிறகு நீங்கள் அவனின்ரை குளிசையளைக் குடிக்கிறேலை...

தந்தை :- ஓம் சேர்....

வாத்தியார் :- அப்ப நான் போட்டு வரட்டே பிறகு வந்து பாக்குறன் (வாத்தியார் வெளியேறுதல்)

பாடல்

**போறாராம் போறாராம் வாத்தியாரு போறாராம்**
**போறாராம் போறாராம் வாத்தியாரு போறாராம்**
**போறாராம் போறாராம் வாத்தியாரு போறாராம்**
**போறாராம் போறாராம் வாத்தியாரு போறாராம்**

## *காட்சி* - III

தந்தை கூட்டருகில் நித்திரைத் தூக்கத்துடன் இருத்தல் நபர் 7 வருகை தந்து தந்தையாரைத் தட்டி எழுப்பி கூறுதல்)

நபர் 7 :- 5மணி

தந்தை :- 5 மணிக்கு 5 g science ... எடடா புணலை ஓட்டுறா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புணலை ( பாடத்தை புணலில் ஊற்றுவது போல் பாவனை செய்வார்) ஆ....... படி...படி.... பெடியனுக்கு விக்கும் மெதுவாய்.. ஆ... தடவிவிடு.... (மீண்டும் போய்த்தூங்குதல்)

நபர் 7 :- 8 மணி

தந்தை :- 8 மணிக்கு 10 g கணிதம் இது கொஞ்சம் கசக்கும் ஓட்டுறா புணலை ஆ... மெல்ல தடவி விடு....(மீண்டும் போய் இருத்தல் நபர் 7 தட்டி எழுப்பி)

நபர் 7 :- 11 மணி

தந்தை :- 11 மணிக்கு 14 g வரலாறு ஓட்டு புணலை... ஆ... ரைட்....தடவிவிடு.... (மீண்டும் போய் இருத்தல் நபர் 7 தட்டி எழுப்பி)

நபர் 7 :- 2 மணி

தந்தை :- 2மணிக்கு 4 g இங்கிலீசு ஓட்டு புணலை கொஞ்சம் கசக்கும் கஸ்ரப்பட்டு விழுங்கு .. ஆ.. தடவிவிடு... (மீண்டும் போய் இருத்தல் நபர் 7 தட்டி எழுப்பி)

நபர்7 :- 5 மணி

தந்தை :- 5 மணிக்கு 18 g சமயம் இது இனிக்கும் சரி.. ஆ... ஓட்டு புணலை ஆ... றைற் ஒரு மாதிரி எல்லா மருந்தும் குடுத்தாச்சு... இனி நிம்மதி தான்

( நபர்7 வெளியேறுவார் தந்தை கூட்டருகில் நித்திரை கொள்ளுவார் வாத்தியார் பிரவேசிப்பார்)

## *காட்சி* - IV

பாடல்

**வாறாராம் வாறாராம் வாத்தியாரு வாறாராம்...**
**வாறாராம் வாறாராம்...வாத்தியாரு வாறாராம்**
**வாறாராம் வாறாராம்...வாத்தியாரு வாறாராம்**
**வாறாராம் வாறாராம்...வாத்தியாரு வாறாராம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

( வாத்தியார் கூட்டினுள் இருக்கும் மகனை பரிசோதித்து விட்டு தந்தையிடம்)

வாத்தியார் :- நான் தந்த விற்றமின் குளிசையளை பெடியனுக்கு ஒழுங்கா குடுத்தனியள் தானே....

தந்தை :- நேரத்துக்கு ஒண்டும் விடாமல் குடுத்தனான்.. சேர்....

வாத்தியார் :- பெடியனில கொஞ்சம் முன்னேற்றம் தெரியுது....

தந்தை :- முன்னேற்றம் தெரியுதே...ஆ....

வாத்தியார் :- ஓம்... ஓம்.. முன்னேற்றம் தெரியுது.... நாளைக்கும் போட்டியல்.... என்டால்.... பெடியன் நீங்கள் நினைச்சமாதிரி ..... அந்தமாதிரி... வருவான்...!

தந்தை :- அந்த மாதிரி...

வாத்தியார் :- அந்தமாதிரி... exam மும் வடிவாய் செய்வான்....

தந்தை :- சரி சேர்...

வாத்தியார் :- சரி அப்ப நான் போட்டு வரட்டே....

## பாடல்

**போறாராம் போறாராம் வாத்தியாரு போறாராம்**

**போறாராம் போறாராம் வாத்தியாரு போறாராம்**

**போறாராம் போறாராம் வாத்தியாரு போறாராம்**

**போறாராம் போறாராம் வாத்தியாரு போறாராம்**

(வாத்தியார் பாடலுக்கு வெளியேறுவார்).

## *காட்சி* - V

(நபர் 7, 6, 4 ஆகியோர் பிரவேசித்து கூட்டினுள் இருக்கும்மகனை வெளியே எடுக்க முனையும் போது)

தந்தை :- தம்பியவை மெதுவாய்த் தூக்குங்கோ என்ர பெ-டியன் ஓட்டப் போட்டியில முதலாமிடம் ஓடிடுவான் கவணம் மெதுவாய் தூக்கி அவனைப் பிடியுங்கோ (மகன் கூட்டைத் தூக்கும் போது பறித்துக்கொண்டு ஓடுதல்)

தந்தை :- பிடியுங்கோ.... பிடியுங்கோ.... அவன் ஓட்டப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டில முதலாமிடம் எண்டனான்... (மூவரும் சேர்ந்து பிடித்தல்)

தந்தை :- தம்பி பள்ளிக்கூடம் போகவேனும் தம்பிக்கு சாப்பாடு தீத்துங்கோவன்.... ஆ.. புடியுங்கோ... தம்பி சாப்பிடடா....(சாப்பிட்ட பின் தந்தை பாடசாலைக்கு சென்று மகனை பரீட்சை நிலையத்தில் விட்டு விட்டு)

தந்தை :- தம்பி அப்பா போட்டு வாறன் ...வடிவா.. எழுது என்ன...

(தந்தை வெளியேற ஏனைய பாடசாலை மாணவர்கள் ஒவ்வொருவராக வந்து அமருவார்கள்.. வாத்தியாரும் அவரது உதவியாளரும் பிரவேசிப்பார்கள்.)

வாத்தியார் :- பெடியள் exam என்டோண்ண வேளைக்குத்தான் வந்திருக்கிறாங்கள்... நேரம் கிடக்கு... டேய்... பெடியளை ஒருக்கா செக் பண்ணோனும்.... இப்பத்தைய பெடியள் பொக்கற்றுக்க பிட்டுகள் கொண்டு வாறாங்கள்....

உதவியாளர் :- புட்டுத் தோசையோ....

வாத்தியார் :- அது இல்லையடா.... பிட்டு என்டா... கேள்வியை பார்த்திட்டு முன்னமே விடை எழுதி பொக்கற்றுக்க செருகிக்கொண்டு வாறது....

வாத்தியார் :- (மாணவன் 1 இடம் சென்று) தம்பி உண்ரையை ஒருக்காக் காட்டு..... (சிரித்தபடி) பொக்கற்றை.... (பரிசோதித்தல்)

வாத்தியார் :- இவரிட்டை ஒண்டும் இல்லை......

வாத்தியார் :- (மாணவன் 2 இடம் சென்று) காட்டன இவரிட்டையும் ஒண்டு மில்லை போகேக்க (உதவியாளரைக் காட்டி) இவரைச் சந்திச்சுப் போட்டு போ... கன்டோசு தருவார்..

வாத்தியார் :- (மாணவன் 3 இடம் சென்று) பிடி கம்பை (உதவியாளரிடம் கொடுத்தல்) சின்னப் பேப்பரிலை நிறைய விசயம் எழுதிக் கொண்டு வந்திருக்கிறான் கவணி ஆளை...(உதவியாளர் அவனை வடிவாகக் கவனித்தல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாத்தியார் :- பிடியனை கம்பை (மாணவன் 4 இடம் சென்று) உங்கற்றா பொக்கற்றுக்க பெரிசாய் கிடக்கு உங்கற்றா பெரிய பேப்பரடா...கேள்விப் பேப்பரை முதலே பார்த்திட்டான் போல கிடக்கு கவனி இவனையும்.. (உதவியாளர் கவணித்தல்)

வாத்தியார் :- (மாணவன் 6 இடம் சென்று) இவரிட்டை ஒண்டும் இல்லை...

உதவியாள் :- (மகனைப்பார்த்து) இவரைப்பாக்கத் தேவையில்லையோ...?

வாத்தியார் :- அவரைத்தானே எல்லாரும் பார்த்துக் கொண்டு இருக்கினம்....சரி நேரமாகுது...பேப்பரைக் குடு ரெடி ஸ்ராட் எண்டோன்ன எல்லாரும் எழுத வேண்டும்.

உதவியாளர் :- (மகனிடம் சென்று) இவரிட்டை 2,3 பேப்பரைச் சேர்த்துக் கொடுப்பம்... தம்பி வீட்டையும் அப்பாட்டை கொண்டேக்.. குடு....

வாத்தியார் :-உதவியாளரைப் பார்த்து குடுத்திட்டியே... ஆ...றெடி ..ஸ்ராட்....(மாணவர்கள் அனைவரும் கலகலப்பாக பரீட்சை எழுதுவார்கள் பரீட்சையைக் குழப்பும் மாணவர்களை பார்த்து)

வாத்தியார் :- செய்யடா exam... exam.. செய்யடா... நேரம் போகுது எல்லே...பள்ளிக்கூடம் எல்லே.... (மாணவன் 3 உம் 7 உம் கதைத்துக்கொண்டு இருப்பார்கள்) நீ என்னடா அவனோட கதைத்துக் கொண்டு இருக்கிறது.... இழுத்தெடடா அவனை... கதைக்கிறதுக்கு வந்தனியளோ..... exam வடிவாய் செய்து போட்டுப் போங்கோ.... சரி நேரமாச்சு... பேப்பரை வேண்டு.. ( உதவியாளர் பேப்பரை வேண்டுதல்)

உதவியாளர் :- (தூக்கத்தில் இருக்கும் மகன் அருகில் சென்று) சேர்...

வாத்தியார் :- என்னடா....

உதவியாளர் :- பெடியன் படுத்திருக்கு இரவு படம் பார்த்தவனாக்கும்.....

வாத்தியார் :- படம் பாக்கேலையடா...exam எல்லே இரவு ஒரே படிப்பாக்கும்... இழுத்தெடு பேப்பரை....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவியாளர் :- பேப்பரிலை ஒண்டையும் காணேலை... சுட்டெண்ணையும் காணேலை...
வாத்தியார் :- சுட்டெண் இல்லையோ...சரி மேசையைப் பார்த்து எழுதிப்போட்டு பேப்பரைக்கொண்டு வா...
உதவியாளர் :- சரி சேர்.
வாத்தியார் :- எண்ணீட்டியே ...?
உதவியாளர் :- சரி சேர்.
வாத்தியார் :-தம்பியவை exam முடிஞ்சுது வீட்டை போட்டு வாங்கோ பெடியலுக்கு சந்தோசத்தை பாருங்கோவன் exam முடிஞ்சோன்னை ஆடிப்பாடிப் போயினம்...

(வாத்தியார் வெளியேறுகிறார். தந்தை வருகை தந்து)

தந்தை :- சரி நேரமாச்சு பெடியனைப் போய் கூட்டி வருவம் தம்பி எழுதிக்களைச்சுப் போய் இருக்கிறான்.... தம்பி எழும்படா... (உதவியாளரைப்பார்த்து) தம்பி நல்லாச் சோதினை செய்தவனே...?
உதவியாளர் :- ஒண்டுக்கும் கவலைப்படாதேங்கோ......பேப்பர் கிளியறாய் இருந்தது.....
தந்தை :- சரி சேர்..
(மகனை அழைத்துக் கொண்டுசென்று மீண்டும் கூட்டினுள் அடைக்கின்றார். அதன் பிற்பாடு நபர் 1, 2, 3, 4, 5, 6, 7 ஆகியோர் ஒருவர் ஒருவராக அரங்கினுள் வந்து உரையாடலை ஒவ்வொருவகையான உணர்வில் மேற்கொள்வார்கள்.)

நபர் 2 :- இதில்லைப் படிப்பு
நபர் 3 :- இதில்லைப் படிப்பு
நபர் 6 :- இதில்லைப் படிப்பு
நபர் 5 :- இதில்லைப் படிப்பு
நபர் 4 :- இதில்லைப் படிப்பு
நபர் 1 :- வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகின்றான். ஆகவே நாங்கள் பல்வேறுபட்ட நூல்களை வாசித்து எமது அறிவைப் பெருக்கிக்கொள்ள வேண்டும்.
நபர் 2 :- நாம் எமது வாழ்க்கைக்குத் தேவையான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயங்களை அருகில் உள்ள நூலகங்களினை நாடிச் சென்று அங்குள்ள நூல்கள் வாயிலாக கற்றுத் தெளிவடைய வேண்டும்.

நபர்4 :- உலகிலேயே மிகச்சிறந்த நண்பன் நூல்கள் தான்...

நபர்6 :- நூலகங்களினை நாடி நல்ல நூல்களினைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

நபர் 7 :- ஒரு நூலகம் திறக்கப்படும் போது பல சிறைச்சாலைகள் மூடப்படும்.

நபர்1 :- அப்பிடி என்டால் நாங்கள் எங்கடை அறிவைப் பெருக்க என்ன செய்யவேண்டும்.

நபர் 7 :- நூலகங்களினை நாடிச் செல்ல வேண்டும்.

நபர்1 :- எவ்வளவோ இடம் இருக்க ஏன் நூலகத்துக்குத் தான் போகவேணும் என்னுறியள்...

நபர்7 :- சுய கற்றலுக்கும் சுய தேடலுக்குமான களங்களாக நூலகங்கள் விளங்குகின்றது. அங்குசென்று பல்வேறுபட்ட நூல்களைக் கற்றுக்கொள்வதன் ஊடாக எமது அறிவைப் பெருக்கிக்கொள்ளலாம்.

நபர்1 :- அங்கு போறதாலை எங்களுக்கு என்னென்ன பயன் கிடைக்கும் அதுகளையும் சொல்லுங்கோவன்

நபர் 7 :- மூளை விருத்தியடையும்

நபர் 3 :- அறிவு பெருகும்

நபர் 7 :- எல்லாத்துறைகளையும் அறிந்து கொள்ளலாம்

நபர் 3 :- பொது அறிவு வளரும்

நபர் 7 :- எங்களை மாதிரி நல்ல மனிதர் ஆகலாம்

நபர் 3 : - சுய அறிவு பெருகும்

நபர் 7 :- அளவுக்கு அதிகமாக கற்கிறதாலை எழுத்துப் பிழையில்லாமல் எழுதலாம்

நபர் 1 :- என்னென்ன பயன் கிடைக்கும் எண்டு சொன்னனியள் என்னென்ன நூல்களையும் கற்கலாம் எண்டு சொல்லி விடுங்கோவன்.

நபர் 7 :- (பார்வையாளரைப்பார்த்து) உங்களை மாதிரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னப்பிள்ளையளுக்கு ஏற்ற சிறுகதைகள், பஞ்சதந்திரக்கதைகள், நகைச்சுவைத் துணுக்குகள், வீர தீரக்கதைகள் எல்லாம் வாசிக்கலாம்...

நபர் 1 :- இதெல்லாம் இருக்கே... இண்டைக்கே நான் போகப்போறன்...

நபர் 3 :- அதுமட்டுமே... பாடசாலை மாணவர்களுக்கு பாடப் புத்தகங்களுக்கு மேலான சுயசரிதை வரலாற்று நூல்கள், பொது அறிவு , பழமொழிகள் இப்படிப் பல்வேறு பட்ட நூல்கள் இருக்கு...

நபர் 7 :- அம்மாமார் தாத்தாமார் வயது போன பாட்டிமார்களுக்கு ஏற்ற நல்ல நல்ல கதைகள் ஆன்மீக விடயங்கள் சோதிடம் சம்பந்தமான நூல்கள், சமயல் குறிப்புகள் சம்பந்தமான நூல்கள்,இப்படி ஏராளமான புத்தகங்களை வாசித்து அறிவைப்பெருக்கலாம்....

நபர் 1 :- அவையளுக்கும் அங்க புத்தகம் கிடக்குதே.....

நபர்7 :- அவையளுக்கும் கிடக்கு அது மட்டுமே பத்திரிகைகள் சஞ்சிகைகள், இணையப்புத்தகங்கள் எல்லாம் இருக்குது உங்கட அறிவை நீங்களே பெருக்கிக்கொள்ளலாம்

நபர் 6 :- அப்ப நாங்கள் எங்க போறது...

நபர் 2 :- உங்களுக்கு பக்கத்தில உள்ள நூல் நிலையங்களுக்குச் சென்று அங்குள்ள நூல்களைக் கற்று உங்கட அறிவைப் பெருக்கிக்கொள்ளலாம்...

நபர் 6 :- (பார்வையாளரைப்பார்த்து) நீங்கள் அங்க போறனீங்களோ... போறாக்கள் கையைத்தூக்குங்கோ.... கணக்கப்போர் அங்க போகேல்லைப் போல கிடக்கு... அப்ப எல்லாரும் வாறீங்களே..... அப்ப எல்லாரும் வாங்கோ... நூலகங்களுக்குப் போவம் ... (கூட்டினுள் இருக்கும் மகன்)

மகன் :- என்னையும் கூட்டிக்கொண்டு போறியளே.... (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை :- (இவர்களிடம் ஓடிச் சென்று) எனக்கு இப்பிடி ஒண்டு இருக்குது என்டு தெரியாது தெரிஞ்சிருந்தா... நான் இவனை கூட்டிலை அடைச்சு வைச்சிருந்திருக்கமாட்டன்.... இவனையும் கூட்டிக்கொண்டு போங்கோ (கூட்டில் இருந்து திறந்து விடுதல் மகன் ஆனந்தமாக ஆடுதல் அனைவரும் வட்டமாக பாடியபடி)

பாடல்

**நூலகங்கள் தேடி நாங்கள் சென்றிடுவோம்**
**அங்கு நல்ல நூல்கள் தன்னை நாங்கள் கற்றிடுவோம்**
**நூலகங்கள் தேடி நாங்கள் சென்றிடுவோம்**
**அங்கு நல்ல நூல்கள் தன்னை நாங்கள் கற்றிடுவோம்**

(எஸ்.ரிஅருள்)

எல்லோரும் :- எல்லோரும் வாங்கோ.... எல்லாரும் வாறியளோ..... (பாடலுடன் பார்வையாளர் பகுதியை விட்டு வெளியேறுவார்கள்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளைய தலைவர்கள்

சிறுவர் விழிப்புணர்வினை ஏற்படுத்தும் முகமாக ஆற்றுகை செய்யப்பட்டது. வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேசசெயலக பட்டதாரிப்பயிலுனர்களின் நடிப்பில் 2013 ஆண்டு புத்தாக்க அரங்க இயக்கத்தின் எழுத்துருவாக்கம் நெறிப்படுத்தலில் ஆற்றுகை செய்யப்பட்டது. தொடர்ச்சியாக யாழ்.மாவட்டப்பாடசாலைகளில் புத்தாக்க அரங்கு இயக்க கலைஞர்களால் ஆற்றுகை செய்யப்பட்டது. வலி.வடக்கு பிரதேசசெயலக சிறுவர் தின விழாவில் நிகழ்த்தப்பட்ட இவ் ஆற்றுகையின் சிறப்புக்காரணமாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபராக இருந்த சுந்தரம் அருமைநாயகம் அவர்களின் பாராட்டினை ப்பெற்றுக்கொண்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளைய தலைவர்கள்

### *காட்சி - I*

(பாடல் ஆரம்பமாகும் போது அரங்காடிகள் ஆடல் கோலத்துடன் ஆடுகளத்தினுள் நுழைவர்.)

(பாடல் இடம் பெறும் போது சிறுவர்களிற்க்கான அடக்கு முறையினை பிரதி பலிக்கும் வகையில் காட்சி படிமங்கள் கொண்டுவரப்படல் வேண்டும். வேலைக்கமர்த்தல். தாக்குதல். கூட்டுக்குள் சிறுவன் ஒருவன் இருத்தல்.)

பாடல்

**இன்றைய சிறுவர் நாளைய தலைவர்**
**இமயத்தை வென்றிடும் சாதனை வீரர்**
**அவர் உணர்விற்கு உயிர் கொடுப்போம்**
**அவர் வாழ்வு வளம் பெற நாம் உழைப்போம்**

( பாடல் நிறைவடைய பாத்திரங்கள் ஒவ்வென்றும் பார்வையாளரை நோக்கி)

பாத்திரம் 1 - சிறுவர்கள் நாட்டின் தலைவர்கள்
பாத்திரம் 2 - எங்கட விருப்பு மகிழ்வாக இருத்தல்
பாத்திரம் 3 - நாங்கள் விரும்புவது சுதந்திரம்
பாத்திரம் 4 - புதியது படைப்பதே எமது ஆசை
பாத்திரம் 5 - கல்வி எங்களுக்கு சுமையாகாமல் சுகமாக இருக்க வேண்டும்
பாத்திரம் 6 - சிறுவர்கள் இல்லையேல் சமூகம் மகிழ்வற்றதாய் மாறிவிடும்
கதைசொல்லி - எங்கட சமூகத்தின்ர உயிர்ப்பென்பது சிறுவர்களது எதிர்காலத்தில தான் இருக்கு அவர்களை சரியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிப்படுத்தாட்டி... அவர்களுக்கான உரிமைகளிற்கும்... உணர்வுகளிற்கும்... முக்கியத்துவத்தினையும் கொடுக்காட்டி அவர்களின் எதிர்காலம் ..........? சிறுவர்களிற்கு சமூகத்திலை நடக்கிற ஒடுக்கு முறைகளை பாருங்கோ...

(அனைவரும் பாடலுடன் வெளியேறுவார்கள்.)

## காட்சி - II

தந்தை - தம்பி வேளைக்கு வெளிக்கிடு வேலைக்கு போக வேணும்...

தாய் - என்ன கதைக்கிறியள் பெடியன் இண்டைக்கு பள்ளிக்கூடம் போக வெல்லே வேனும்

தந்தை - உந்த விசர் கதையளை விட்டுட்டு உன்ர வேலையை பார் (தந்தை வெளியேறல்)

மகன் - வேலைக்கு செல்லல்

தந்தை - (மகனை கூட்டிச் செல்லல் )டேய் வாடா

மகன் - நான் படிக்க போறன்

தந்தை - படிச்சு என்னத்த காணப்போறாய்.... நான் சொல்லற படி கேளடா....

மகன் - பெரிய ஆளா வரப்போறன்..... பெரிய வேலைக்கு போகப்போறன்....

தந்தை - நீ பெரிசா வந்து வேலைக்கு போகப்போறதை நான் இப்பவே செய்யிறன். சத்தம் போடாமல் வாடா.... வேலைக்கு. (முதலாளி தாளத்திற்குரிய ஆடல் கோலத்துடன் வருகை தருவார்)

முதலாளி - (தந்தையைப்பார்த்து) என்ன சின்னப்பெடியனை கூட்டிக்கொண்டு வந்திருக்கிறியள். என்ன அலுவல்.

தந்தை - என்னால முந்தின மாதிரி வேலை செய்யேலாது. என்ர வேலையை பொடியனுக்கு குடுங்கோ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு.... (தயங்கியபடி) குடிக்க மட்டும் காசு தந்தால் போதும்.

முதலாளி - சின்னப்பிள்ளையளை வேலைக்கு அமர்த்துறது சட்டப்படி குற்றம்...

தந்தை - நான் வெளில ஒன்டும்.(சிரிக்கிறார் சொல்லமாட்டன்...

முதலாளி - சரி வேலைக்கு பொடியன் வாறதை வெளியால சொல்லிப் போடதையுங்கோ. எனக்குச் சிக்கல்.

தந்தை - சீசீ.... நான் வெளியிலை சொல்லமாட்டன்.... நீங்கள் தான் தெய்வம். (தந்தை வெளியேறுகின்றார் சிறுவர்கள் பலர் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருப்பார்கள் அவர்களை முதலாளி துன்புறுத்துவார் பாடலுக்கு ஏற்ப சிறுவர்கள் துன்பத்தை வெளிக்காட்டுவார்கள்.)

பாடல்

**சிறுவர் கொண்ட விலங்கை அறுத்து நீயும் எறிந்திடு**

**மண்ணில் புதிய மரபொன்று முளைக்கும்**

**துன்பச்சிலுவையை இறக்கி வைத்திடு**

**அவர் சுமக்கும் துன்பச்சிலுவையை இறக்கி வைத்திடு**

**புதிய வாழ்வு அங்கே பிறக்கும்.**

(எஸ்.ரி.அருள்)

( சிறுவர்கள் துன்ப மிகுதியினால் துன்பப்பட்டு விழுவார்கள் முதலாளி அவற்றினை பார்த்து ரசித்து விட்டு வெளியேறுவார். பின் சிறுவர்கள் ஒவ்வொருவராக வெளியேறுவார்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி - III

(சிறுவர்கள் கூடி நிற்றல்)

சிறுவன் 1 :- டேய் நாளைக்கு பள்ளிக்கூடம் போறியே

சிறுவன் 3 :- ஓம் பள்ளிக்கூடம் போறன்

சிறுவன் 2 :- உனக்கு என்ன விசரே

சிறுவன் 1 :- பள்ளிக்கூடம் போய் என்ன செய்யிறது.

சிறுவன்- 3 :- படிக்கவேனும். படிச்சா தானே நல்லம்

சிறுவன் :- உனக்கு விசரே (மற்றவனை காட்டி) உவனை அங்கால முதல் கலை. நாங்கள் நாளைக்கு என்ன செய்யிறது என்டதை பிளான் பன்னுவம்

சிறுவன் 2 :- இவன்ர கதையை விட்டிட்டு . டேய் நீ நாளைக்கு பள்ளிக்கூடம் போற மாதிரி வெளிக்கிட்டு வந்து அவடத்துக்கு வா. நாங்கள் அங்க இருந்து எங்கட வேலைக்கு போவம். இரும்பு கனக்க எடுத்து குடுத்தா நிறைய காசு வரும். அங்க இரும்பு பொறுக்கலாம்... என்ன நான் சொல்லுற மாதிரி செய்.... என்னடா...

சிறுவன் 1 :- ஓ.கே.

சிறுவன் 3 :- (யோசித்து விட்டு) டேய் நானும் வாறனடா...

சிறுவன் 2 :- சரி நாங்கள் எல்லரும் போவம்...

(சிறுவர்கள் இரும்பு பொறுக்கும் போது பாடசாலை சமூகத்தினரால் பிடிபடுகின்றார்கள். சிறுவனின் பெற்றோர் ஒருவரை அதிபர் அழைத்தல்)

அதிபர் :- (பெற்றோர் வரல்) வாங்கோ...

தாய் :- (அதிகாரத்துடன்) என்ன வரச்சொன்னியளாம்.....

அதிபர் :- உங்கட பிள்ளையள் பள்ளிக்கூடத்துக்கு கன நாளா வரவும் இல்லை. பிறகு இண்டைக்கு பாத்த இரும்பு களவெடுத்திருக்கினம்..... அதுதான்..

தாய் :- நாங்கள் தான் பள்ளிக்கூடம் அனுப்பாமல் வேலைக்கு அனுப்பினாங்கள். (கோபத்துடன்) இப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன பிரச்சினை....

அதிபர் :- சிறுவர்கள் வேலைக்கு போறதே சட்டப்படி பிழை. அதிலையும் இப்படியெண்டால்....

தாய் :- உதை பற்றி எங்களுக்கு தெரியாது..எங்கட பிள்ளையை நாங்கள் எங்கையும் அனுப்புவம் யாரும் கேக்கேலாது. நாங்கள் தான் பெத்தநாங்கள் சரியே...

அதிபர் :- சரி... நாங்கள் பிள்ளையை அனுப்ப வேண்டிய இடத்துக்கு அனுப்புறம் நீங்கள் போகலாம்..

தாய் :- நீங்கள் செய்யிறதைச் செய்யுங்கோ... (மகனை அழைத்து) வாடா நாங்கள் வீட்டை போவம்

(மகனை அழைத்துச் செல்லல்)

## *காட்சி* - IV

தாய் :- அட... அட... நேரமும் ஆகுது.

தாத்தா :- மோன பிள்ளையள் படிக்கிற நேரத்தில என்ன கண்டறியாத ரீவி நாடகம் பாக்கிறது...

தாய் :- நீ சும்மா இரு. என்ன நெடுகவே பாக்கிறம். இரவு ஏழுமணியில இருந்து பத்து மணி வரைதானே பாக்கிறம்....

தாத்தா :- அப்ப பிள்ளையள் எப்ப தான் படிக்கிறது.. என்டைக்கு இதுகள் வந்துதோ அப்பவே எல்லாக் குடும்பமும் குலைஞ்சு போச்சு....

தாய் :- நேற்று அவனை பொலிஸ் பிடிக்குமோ...? இல்லையோ...? தெரியாது

தாத்தா :- அவனை பிடிச்சா என்ன...! விட்டா.. என்ன...! உனக்கென்ன....! நீ பாக்கிற வேலையை பாரன்....!

(இவ் வேளை மகன் தாயிடம் வரல்)

மகன் :-அம்மா இந்த கேள்விக்கு விட சொல்லி தாங்கோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய் :- சும்மா போடா அங்கால... பள்ளிக்கூடத்தில வாத்திமார் ஒண்டும் சொல்லித் தாறேல்லையே.... அங்கால போடா முதல்ல அவனை இண்டைக்கு பிடிப்பாங்களோ... தெரியாது..

மகன் :- அம்மா..... வீட்டு வேலை செய்து கொண்டு போகாட்டி ரீச்சர் அடிப்பா....

தாய் :- கதைச்சியெண்டா நான் உனக்கு இப்ப அடிப்பன்.... இவங்கள் வேற ஒரே அட்வடிஸ்மென்ர போட்டுக்கொண்டு.

மகன் :- அம்மா பாடம் சொல்லி தாங்கோ...

தாய் :- அட இண்டைக்கும் தொடரும் என்டு போட்டுட்டாங்கள்... இண்டைக்கும் அவனை பிடிக்கேல போடா... போடா கண்டறியாத படிப்பு.... படிச்சு என்னத்த கிழிக்க போறாய். (மகனிற்கு தாய் அடித்தல் அவ்வேளை பிள்ளைகள் பாடலுக்கு அபிநயிப்பர்)

பாடல்

**பாடம் சொல்லி தாவனை பெற்றவளே தாயே (2)**
**அங்கே வாத்தியர் அடிப்பாரு பெற்றவளே தாயே**(2)

(எஸ்.ரி.அருள்)

(பாடல் முடிய வெளியேறுவார்கள்)

## *காட்சி* - V

(தாய் தொலைபேசியில் கதைத்துக்கொண்டு இருத்தல் இது சைகை மூலம் வெளிப்படுத்தப்படலாம்.)

மகள் :- அம்மா இந்த கணக்கை செய்ய வேனும் ரெலி போனை ஒருக்கா தாங்கோ அதில உள்ள கல்குலேட்டரில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து பாப்பம்.

தாய் :- சும்மா அங்கால போடி கதைக்கிறன் எல்லே.

மகள் :- ஒரு மணித்தியாலமாய் கதைக்கிறியள்.

தாய் :- கணக்க கதைக்க போறியே (கோபத்தில் போனை தூக்கி எறிதல் போன் உடைந்தவுடன் மகளை போட்டு அடித்தல்)

## காட்சி - VI

(சிறுவர்கள் விளையாடிக் கொண்டு இருத்தல். சிறுவர்களிற்கு பொருத்தமான விளையாட்டுக்களினை பயன்படுத்த முடியும்
இவ்வேளை சிறுவன் ஒருவனும் விளையாட செல்வதற்கு)

சிறுவன் :- சித்தி நானும் விளையாடப்போறன்....

சித்தி :- விளையாட்டுத்தான் உனக்கு ஒரு கேடு.. நான் சொன்ன வேலையை பார். உன்னை பெத்தவள் பெத்துப்போட்டுப் போட்டால் நன் உன்னை கட்டி அவுக்க வேண்டி கிடக்கு. எல்லாம் என்ர தலைஎழுத்து ... கொப்பர் தன்ர பாடு....

சிறுவன் :- (தனக்குள்) அம்மா... அம்மா..... என்னை எல்லாரும் அடிக்கினம்... நானும் உன்னோடா வாறன்.

சித்தி :- செத்து தொலையன் ( அடித்தல்) இருந்து கொண்டு. உன்னால ஒரே கரைச்சல்.

சிறுவன் :- (அழுதல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி - VII

(சுதந்திரம் அற்ற வகையில் உள்ள சிறுவன் அழுதல்)

சிறுவன் :- அம்மா எனக்கும் சுதந்திரமா இருக்க விரும்பம். என்னையும் மற்றாக்கள் மாதிரி சுதந்திரமா இருக்க விடுங்கோ.

தாய் :- நீ படிக்கிறதிலை தான் எங்கட மானம், மரியதை, கௌரவம், எல்லாம் இருக்கு இண்டைக்கு சேர் வருவர் சத்தம் போடாமல் இரு

வாத்தியார் :- (வாத்தியார் வரல்) ஆஆஆஆஆஆஆஆஆஆஆஆ என்ன. பிரச்சினை

தாய் :- என்ர பொடியன் பாஸ் பண்ண வேனும் அது தான்....

வாத்தியார் :- அது ஒண்டும் பிரச்சினையில்லை. நான் சொல்லுற மாதிரி செய்தியள் எண்டா சரி. நான் சொல்லுறதை குறியுங்கோ. படிமங்காக காட்டுதல். (காட்சி ரீதியாக கல்வித் திணிப்பை மேற்க்கொள்ளல்)

வாத்தியார் வரல் :- எப்பிடி பெடியன் படிக்கிறானோ..

தாய் :- ஏதோ படிக்கிறான்....

வாத்தியார் :- பெடியன் படிக்கிறானோ எண்டதை பாப்பம். (பரிசோதித்தல்) பெடியனில முன்னேற்றம் தெரியுது. பெடியன் நல்லா வருவன். நான் வரட்டே போட்டு.

சிறுவன் :- (துயரத்துடன் இருத்தல்)

கதைசொல்லி :- இவ்வாறான செயற்பாட்டால் சிறுவர்களை வளப்படுத்த முடியாது அவர்களது உலகம் மகிழ்வாய் இருக்க வேணும். சிந்தனைகளிற்கு முக்கியம் கொடுக்கும் இடமாக இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *காட்சி* - VIII

(சிறுவர்கள் மகிழ்வாக உள்ள செயற்ப்பாடுகள் படிமங்களாக சித்தரிக்கப்படலாம்)

பாடல்

**ஓடி விளையாடு பாப்பா**
**நீ ஓய்ந்திருத்தல் ஆகாது பாப்பா**
**கூடி விளையாடு பாப்பா**
**ஒரு குழந்தையை வையாதே பாப்பா**
**காலை எழுந்தவுடன் படிப்பு**
**பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு**
**மாலை முழுதும் விளையாட்டு என்று**
**வழக்கப்படுத்திக்கொள் பாப்பா.** (பாரதியார்)

(பாடலுக்கான அபிநயம் முடிவடைந்ததும் அனைவரும் மீண்டும் ஆற்றுகை ஆரம்பத்தில் இருந்தது போல ஆடியபடி வட்டவடிவமாக வந்து உரையாடலை மேற்கொள்வார்கள்)

பாத்திரம் 1 - சிறுவர்களுக்கெதிரான அடக்குமுறையினை உடைத்தெறிவோம்

பாத்திரம் 2 - சிறுவர்களினை கண்ணெணப் போற்றுவோம்

பாத்திரம் 3 - சிறுவர் கல்விக்கு உயிர்கொடுப்போம்.

பாத்திரம் 4 - சிறுவர் துஸ்பிரயோகம் இல்லாத சமூகத்தினை படைப்போம்

பாத்திரம் 5 - சிறுவர்களது உள ஆரோக்கியத்திற்கு வளம் சேர்ப்போம்.

பாத்திரம் 6 - சிறுவர்களது செயற்பாட்டிற்கு முக்கியத்துவம் கொடுப்போம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்

**இன்றைய சிறுவர் நாளைய தலைவர்**
**இமயத்தை வென்றிடும் சாதனை வீரர்**
**அவர் உணர்விற்கு உயிர் கொடுப்போம்**
**அவர் வாழ்வு வளம் பெற நாம் உழைப்போம்**

(அனைவரும் மகிழ்வாக பாடி ஆடிய படி வெளியேறுவார்கள்)
(முற்றும்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வதற்கு..

(வாழ்வதற்கு..... / கரிதாஸ் கியூ டெக் நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட வாக்காளர் விழிப்புணர்வு வீதி நாடகப் போட்டியில் முதலாமிடத்தினைப் பெற்றுக்கொண்டது. த.துவாரகன், கு.தவேன்சன், த.பிரவீன், க.பிரியலக்சன் போன்றோர் ஆற்றுகையாளர்களாக செயற்ப்பட்டிருந்தனர்.

இவ்வாற்றுகையானது வடமாகாணத்தில் வாக்காளர்களை விழிப்பூட்டும் வகையிலும், வாக்காளர் பதிவினை விழிப்பூட்டும் வகையிலும், வாக்களிப்பின் அவசியத்தினை உணர்த்தும் வகையிலும் வடமாகாணத்திற்கு உட்பட்ட பிரதேசங்களில் புத்தாக்க அரங்க இயக்கத்தினால் ஆற்றுகை செய்யப்பட்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வதற்கு..

(தேர்தல் விழிப்புணர்வு தெருவெளி நாடகம்)

## *காட்சி* - I

(பாடல் பாடியபடி அரங்காடிகள் ஆடுகளத்தினுள் நுழைகின்றனர்)

பாடல்

**வந்தோமே நாங்கள் இங்கு வந்தோமே**
**கதை ஒன்றை சொல்லிப்போக வந்தோமே**
**எங்களின் வாழ்விற்கான கதை ஒன்றை**
**சொல்லிப்போக வாந்தோமே இங்கு வந்தோமே**
**வந்தோமே நாங்கள் இங்கு வந்தோமே...**

(பாடல் நிறைவடையும் போது வட்ட வடிவில் பாத்திரங்கள் ஒவ்வொருவரும் மூன்று பக்கமும் பார்த்து பேசுவர்)

பாத்திரம் 1 - வாக்களிக்கிறது எங்கட கடமை

பாத்திரம் 2 - வாக்களிக்கிறது எங்கட குடியுரிமை

பாத்திரம் 3 - வாக்களிக்கிறது எங்கள் எல்லாற்றையும் உரிமை

பாத்திரம் 4 - அரசாங்கத்தில வேலை பெற வேனும் எண்டா வாக்குரிமை அவசியம்

பாத்திரம் 1 - வாக்காளர்களாக பதிவு செய்யவேண்டியது எங்கள் ஒவ்வொருவரதும் கடமை

பாத்திரம் 5 - நாட்டின் பிரஜையாக இருக்க வேனும் எண்டா வாக்காளராக எங்களை நாம் பதிவு செய்திருக்க வேண்டும்

பாத்திரம் 6 - வாக்காளரா இருந்தால் தான் தேர்தலில் போட்டியிடலாம்

பாத்திரம் 7 - வாக்குரிமை தான் எங்கட குடியுரிமை

எடுத்துச்சொல்லி - ஓம் ஓம்... இது எங்களுக்கு அவசியமானது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் :- ஓம் ...ஓம்.. இது எங்கள் எல்லோருக்கும் அவசியமானது...

எடுத்துச் சொல்லி : - எங்கடை வாழ்க்கைக்கு மிக மிக அவசியமானது.... ஆதலால் வாக்காளர்களாக பதிவு செய்ய வேண்டியதன் அவசியத்தைப் பற்றியும் வாக்களிப்பு பற்றியும் கொஞ்சம் சிந்திப்போம்...

எல்லோரும் : - ஓம் நாங்கள் எல்லோரும் சிந்திப்போம்

எடுத்துச்சொல்லி : - வாக்காளர் பதிவின் அவசியத்தையும் வாக்காளராக பதிவு செய்யாமல் எங்கட சமூகத்தில உள்ள மக்கள் படுகின்ற துன்பத்தையும் வாக்களிக்க வேண்டிய அனைவரது கடமைகளையும் பற்றி நீங்களும் பாருங்கோவன்....

எல்லோரும் - வாக்குரிமை தான் எங்கட குடியுரிமை

எடுத்துச்சொல்லி :- அப்ப நீங்கள் எல்லாரும் வாக்களிப்பின்ர அவசியத்தினைப் பாருங்கோவன்....

(அனைவரும் ஆடலுடன் வெளியேறுகின்றனர்)

பாடல்

**வாக்காளராகும் அவசியத்தை பார்ப்போமே...**
**நாங்கள் பாரப்போமே...**
**வாக்காளராக இன்றே பதிந்திடுவோமோ...**
**இன்றே நாங்கள் பதிந்திடுவோமே ...**
**வாக்களிப்பு நிலையம் நாடி ...**
**நாங்கள் வாக்களிப்பு நிலையம் நாடி ...**
**எங்கள் வாக்கை நாங்கள் அளித்திடுவோமோ...**
**நாங்கள் அளித்திடுவோமே...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி - II

(காட்சி படிமங்களாக காட்டப்படுகின்றது காதலர் இருவர் திருமன பதிவினை மேற்கொள்ள செல்லல்)

காதலர் - ஐயா நாங்கள் இரண்டு பேரும் கலியாணம் கட்ட வேனும்

பதிவாளர் - எத்தினை வயது

காதலர் - 19

பதிவாளர் -சரி..கட்டலாம் முதல்ல நீங்கள் இந்த நாட்டு வாக்காளர்களா ..... பதிவு இருக்கா.......

காதலர் - அதெண்டா

பதிவாளர் - வாக்குரிமை. நாட்டின் பிரசை எண்டதுக்கான அடையாளம்

காதலர் - அதொண்டும் எங்களிட்ட இல்லை

பதிவாளர் - முதல்ல பதிஞ்சு வாக்காளராகுங்கோ பிறகு கலியானம் கட்டுங்கோ

## காட்சி - III

(இருவர் வரல்)

ஒருவர் - நான் வெளிநாடு போகப்போறன்

மற்றவர் - பாஸ் போட் எல்லாம் எடுத்து போட்டியோ

ஒருவர் - அதுதான் கொழும்புக்கு போகப்போறன்

மற்றவர் - அது சரி முதல் வாக்காளரா பதிஞ்சு போட்டியே

ஒருவர் - ஏன் நான் வாக்காளரா பதிய வேனும். நான் வோட்டே போட மாட்டன் பிறகு ஏன் பதிய வேனும்

மற்றவர் - வாக்க போடுறதும் போடாமல் விடுறதும் உன்ர விரும்பு அதெல்லாத்தையும் விட முதல்ல வாக்காளரா பதியவேண்டியது உன்ர கடமை. அப்பிடி பதிஞ்சாதான் நீ இந்த நாட்டின்ர பிரஜையா கணிக்கப்படும்.

ஒருவர் - நான் தான் வெளிநாடு போகப்பேறனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர் - நீ வெளிநாடு போறதெண்டாலும் முதல் இது வேனும்

ஒருவர் - உன்ர விசர்க்கதையவிடு நான் போட்டுவாறன்

## காட்சி - IV

### எம்.பசி காட்சி

ஒருவர் - (உள்ளே சென்று) வணக்கம் நான் பாஸ்போட் எடுக்க வேனும் அதுதான்

மற்றவர் - சரி. உங்கட வாக்களார் இலக்கம் மற்றும் ஆவணங்களை தாங்கோ

ஒருவர் - எல்லாம் கிடக்கு வாக்காளர் இலக்கம் மட்டும் இல்ல

மற்றவர் - ஏன் பதியேல

ஒருவர் - பதிஞ்சு என்ன பிரியோசனம் எண்டு தான்

மற்றவர் - முதல் பதிஞ்சு வாக்காளர் இலக்கம் இருந்தா தான் நீங்கள் இந்த நாட்டின்ர பிரசையா கணிக்கப்பெறுவீங்க .முதல்ல அதை செய்யிங்க.

## காட்சி - V

(எல்லோரும் விதானையாரிடம் செல்லல்)

விதனையார் - (எல்லோரிடமும் எரிந்து விழுந்தபடி) அஸிட்டன் என்ன சனமெல்லாம் இப்பிடி மொய்ச்சுக்கொண்டு நிண்டா எப்பிடி காத்துவரும் முதல்ல எல்லாரையும் ஒழுங்கில வரச்சொல்லும்

அசிஸ்ரெண்ட் - எல்லாரும் ஒழுங்கா அமைதியா வாங்கோ..... ஐயா எல்லாருக்கும் எல்லாம் செய்து தருவார்.... அமைதியா நில்லுங்கோ......

(ஒவ்வொருவரும் ஒழுங்காக வந்து கூறுவார்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாத்திரம்1 - எங்களை வாக்களரா பதிய வேனும் எண்டு சொல்லுகினம்

விதனையார் - இப்பவாவது எல்லாருக்கும் தெரியுதே வாக்காளராக பதிய வேண்டுமெண்டு வாக்காளர் பதிவின்ர முக்கியத்துவத்தை புரிஞ்சு கொண்டியள் தானே... சரி ...ஒவ்வொருத்தரா வாங்கோ ..நான் எல்லாருக்கும் பதிஞ்சு தாறன் .... (ஒவ்வொருவராக காட்சிப்படிமத்துடன் பதிவர்)

பாத்திரம் 1 - அப்ப நாங்கள் பதிஞ்சிட்டம் தானே ...எங்களுக்கு வாக்காளர் அட்டை இனி வரப்போகுது. நாங்கள் இனி வாக்களிக்கிறது தான் எங்கடை வேலை.....

பாடல்

**பதிந்திடுவோம் இன்றே பதிந்திடுவோம்.**
**வாக்காளர்களாக நாம் இன்றே பதிந்திடுவோம்**
**நம்நாட்டின் பிரஜை ஆகிடுவோம்**
**இன்றே நம் நாட்டின் பிரஜை ஆகிடுவோம்...**

கதை சொல்லி :- சரி அப்ப நீங்கள் எல்லாரும் பதிஞ்சிட்டியள் தானே...பதிஞ்சதோட மட்டும் இருக்கக் கூடாது வாக்களிக்கவும் வேணும் வாக்களிக்கிறது இந்த நாட்டில இருக்கிற ஒவ்வொருவரதும் கடமை அதனை நீங்கள் செய்யாமல் விடக்கூடாது நீங்கள் அனைவரும் உங்களுக்கு விரும்பியபடி ஜனநாயக முறைப்படி வாக்களிக்க வேண்டும். எல்லாரும் வாக்களிக்க றெடியா... கட்டாயம் வாக்களிப்பு தினத்தன்று வாக்களிப்பு நிலையம் சென்று உங்கடை வாக்கை நீங்கள் பதிவு செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்

**வக்களிப்பு நிலையம் நாடி சென்றிடுவோம்**
**அங்கே எங்கள் வாக்கை நாங்கள் அளித்திடுவோம்**
**வாக்களிப்பது எங்கள் உரிமை நிலை நாட்டிடுவோம்**
**எங்களின் உரிமையை நிலைநாட்டிடுவோம்**

(எஸ். ரி அருள்)

கதை சொல்லி - வாக்களிப்பில் பங்குபற்ற முன்னர் வாக்காளர் அட்டையை முன்கூட்டியே பெற்றுக்கொள்ள வேண்டும். வாக்காளர் அட்டை கிடைக்காத நிலையிலும் உங்களுக்கு வாக்களிக்க உரிமையுண்டு தேசிய அடையாள அட்டை வாக்களிப்பிற்க்கு அவசியமானது தேசிய அடையாள அட்டை இல்லாத நிலையில் தேர்தல் ஆணையாளரால் வழங்கப்படும் சிறப்பு அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ளுங்கள். உங்களுக்கான வாக்களிப்பு நிலையத்தை முன்கூட்டியே அறிந்து கொள்ள வேண்டும். நீங்கள் தெரிவு செய்யும் கட்சியையும் பிரதிநிதியையும் முன்கூட்டியே அறிந்து கொள்ள வேண்டும். நேரத்துக்கு சென்று வாக்களிக்க வேண்டும். நான் சொல்லுறது விளங்குதே.....சரி அப்ப நாங்கள் எல்லாம் இப்பவே வெளிக்கிடுவம்....

(அனைவரும் பாடலை பாடியபடி வட்டமாக மூன்று முறை ஆடியபடி வெளியேறுகின்றார்கள்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருகும் மொட்டுக்கள்

கருகும் மொட்டுக்கள் எனும் தெருவெளி ஆற்றுகையானது பெண்களிற்கு எதிராக இடம் பெறும் வன்முறைகள் போதைப்பொருள் பாவனை பிரச்சனைகளையும் வெளிப்படுத்துகின்ற வகையில் இவ்வாற்றுகைகள் தகவமைக்கப்பட்டிருந்தன.

இவ்வாற்றுகையில் அரங்காடிகளாக கு.தவேன்சன், க.ரிதுசன், சி.சிவானுஜன், ச.குபேரன், உ.கரிஸ், தி.திஸ்னுகன், யே.சானுஜன், தி.தனுஜன், ஸ்ரீ.சாதுசன், வி.சிந்துஜன், குயின்சன், நிரோஜன், பா.ஜெயரூபன், கு.சாரூஜன், போன்றோர் பங்குபற்றியிருந்தனர். பாடகர்களாக ஜெயவர்னன், பு.தக்சாந், டொல்கி-யே. யதுசன், சைட்றம் த.அபிஷேக் போன்றோர் செயற்பட்டனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருகும் மொட்டுக்கள்

## காட்சி - I

பாடல்

**தனனானே தனேதானானே தனத் தான னானனே**
**தனனானே தனேதானானே தனத் தான னானனே**
**தனனானே தனேதானானே தனத் தான னானனே**

**[தனனானே தனேதானானே... என்ற தாளக்கட்டுடன்**

கூடிய வகையில் பாடலினை பாடிய படி வட்ட வடிவமாக ஆற்றுகையாளர்கள் அரங்கினுள் நுழைவர்.)

அரங்காடி 1 - எம்மை ஈன்ற தாய் பெண் ஆவாள் (3)

அரங்காடி 2 - சிறுவர்களிற்கு கல்வி சுமையாகாமல் சுகமாக வேண்டும் (3)

அரங்காடி 3 - கயல் போன்ற கண்களை உடைய பெண்களை புயல் போல அடக்குகின்றார்கள் ஆண்கள் (2)

அரங்காடி 4 - கல்வி எங்கட சொத்து (2)

அரங்காடி 5 - சிறுவர்கள் எங்களது இரு கண்கள் (2)

அரங்காடி 1 - பெண்களை போற்ற வேண்டும் (2)

அரங்காடி 2 - புகை நமக்கு பகை

அரங்காடி 3 - மது நாட்டுக்கும் வீட்டுக்கும் கேடு

அரங்காடி 4 - குடி குடியை கெடுக்கும்

அரங்காடி 5 - புகை உயிர் கொல்லும்

அரங்காடி 1 - புகைத்தல் புற்று நோயை உண்டாக்கும்

அரங்காடி 2 - மது என்பது கொடிய அரக்கன்

அரங்காடி 3 - போதைப்பழக்கம் சமூகத்தை சீரழிக்கின்றது

அரங்காடி 4 - போதை என்பது மனித வாழ்க்கையின் புதைகுழி

அரங்காடி 5 - மரணத்தின் முகவரி போதை

எடுத்துச் சொல்லி - எங்கட சமூகத்தில மிகமுக்கியமானவர்கள் சிறுவர்கள், பெண்கள். சிறுவர்கள் எமது சமூகத்தின் சொத்துக்கள் பெண்கள் மதிக்கப்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியவர்கள் ஆனால் எங்கட சமூகத்தில பெண்களிற்கும் சிறுவர்களிற்குமான ஒடுக்குமுறைகள் பரவிக்காணப்படுகின்றன. இதற்கான காரனங்களாக மிதமிஞ்சிய போதைப்பொருள் பாவனையும் காரணமாக அமைகின்றன. சமூகத்தில் போதைப் பொருள் பாவனையாலும் மிதமிஞ்சிய மதுப்பாவனையாலும் ஏற்ப்படும் பாதிப்புக்களை நீங்களே பாருங்கோ.

(அரங்காடிகள் வட்டமாக தாள லயத்திற்க்கு ஏற்பஅசைகின்றனர் அவ்வேளை பின்வரும் பாடல் இசைக்கப்படுகின்றது)

பாடல்

**பெண்ணின் விலங்கை அறுத்து எறிந்திடு**
**மண்ணில் புதிய மரபொன்று முளைக்கும்**
**எண்ணச்சிறையை இடித்து அழித்து**
**வண்ணமாதரின் வாழ்வை உயர்த்து**

(பா.ஜெயரூபன்)

(பாடல் நிறைவடைய தனனானே தனேதானானே.... என்ற தாளக்கட்டுடன் கூடிய வகையில் பாடலினை பாடிய படி வட்ட வடிவமாக ஆற்றுகையாளர்கள் அரங்கினுள் இருந்து வெளியேறுவர்)

## *காட்சி* - II

### மதுபாவனையாளர்கள்

நபர் 1 - உழைக்கிற களை தீர குடிக்க வேணும்...
நபர் 2 - குடிச்சாத்தான் தென்பா நடக்கலாம்
நபர் 1 - வீட்டில எவ்வளவு கஷ்ரமென்டாலும் குடிக்க வேணும்....
நபர் 2 - குடிச்சாத்தான் எல்லாரையும் பயப்படுத்தி வைச்சிருக்கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபர் 1 - சரி மச்சான் நேரமாகு நான் போய் வாறன்

நபர் 2 - சரி மச்சான் நான் போட்டு வாறன் ...பிந்தினா மனுசி தேடுவாள்

நபர் 1 - (வீடு சென்று பிள்ளைகளை அழைத்து) நான் கூப்பிடுறது கேக்கேலையோ..... எங்க இருக்கிறியள்டி ...

மூத்தமகள் - தங்கச்சி படிக்கிறாள் ...நாளைக்கு ஏதோ... சோதனையாம்....

நபர் 1 - பெட்டைச்சிக்கு என்ன படிப்பு வேண்டிக் கிடக்கு... கூப்பிடடி அவளை ..படிச்சது காணும் என்டு சொல்லு ...

மூத்தமகள் - என்னப்பா அவளை படிக்க விடுங்கோவன்....

நபர் 1 - என்னடி என்ரை கதைக்கு எதிர்கதை கதைக்கிறிறோ..... (மகளை அடித்தல்)

மூத்த மகள் - நீங்கள் என்னைத்தான் படிக்க விடேல்லை அவளையாவது படிக்க விடுங்கோ....

நபர் 1 - என்னை எதிர்த்துக் கதைக்கிறாய் என்ன?... (மீண்டும் அடித்தல். இரண்டாவது மகள் ஓடிவந்து)

இரண்டாவது மகள் - அக்காவை அடிக்காதேங்கோ .அப்பா.. நீங்கள் இப்பிடித்தான்அம்மாவைஅடிச்சேசாக்கொல்லிப்போட்டிங்கள் அக்காவை விடுங்கோ... அப்பா.... நான் படிக்கேலை.... எங்களை சந்தோசமாக இருக்க விடுங்கோ அப்பா.... (அழுதல் தந்தை இருவரையும் அடித்தல் மூவரும் அசைவற்று நிற்க பாடல் ஒலிக்கும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்

**குடித்து அழிந்தவர் சரித்திரம் படித்தாயோ**
**உயிர் குடிக்கும் மதுவின் கதைகள் அறிவாயோ**
**இளமை துறந்து முதியவன் ஆவாயோ**
**ஈனக்குரலில் ஊளையும் இடுவாயோ**
**மனமும் குழம்பிட பொறிகள் கலங்கிடும்**
**மனைவி மக்களை தெருவில் தள்ளிடும்**
**நெறிகள் கெட்டதோர் மிருகமாக்கிடும்**
**இளைய வயதினில் பாடை ஏற்றிடும்**

(பாடல் பா.ஜெயரூபன்)

(பாடல் நிறைவடைய மூவரும் அரங்கை விட்டுவெளியேறுவார்கள்)

## காட்சி III
## களம் - தெரு

பாத்திரம் 1 - மச்சி என்னை பாக்கிறாடா. என்னை பாத்து சிரிக்கிறாடா

பாத்திரம் 2 - உண்மையாடா

பெண் 1 - உங்க பாரடி அலையிதுகள்

பெண் 2 - அவயளைப்பற்றி உங்களுக்கு என்ன கதை

பெண் 3 - உங்க பார் கறண்டில அடிபட்ட காகம் மாதிரி

பெண் 2 - உங்கட மூச்சி ஏதோ திறம் தனே

பெண் 1 - அங்க பார் எலும்பு கூட்டுக்கு சீலை சுத்தின மாதிரி

பெண் 2 - நீங்கள் அவயளைபற்றி கதைக்கிறது எண்டா இதில நிக்காதையுங்கோ

இருவரும் - நாங்கள் சொல்லுறது உனக்கு விளங்குதில்லை நீ எக்கேடண்டாலும் கெட்டு போ. நாங்கள் போறம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாத்திரம் 1 - மச்சி இது தான் சந்தர்ப்பம்.

(இருவரும் கிட்ட செல்லல் ஏனையவர்களை அழைத்தல் இது குறியீடு சார்ந்தாக பெண்ணை சிதைப்பது போன்ற காட்சி இடம்பெறுகின்றது) இவ்வேளை பாடல் இசைக்கப்படுகின்றது

பாடல்

**பெண்ணின் விலங்கை அறுத்து எறிந்திடு**
**மண்ணில் புதிய மரபொன்று முளைக்கும்**
**எண்ணச்சிறையை இடித்து அழித்து**
**வண்ணமாதரின் வாழ்வை உயர்த்து**

பாடல் (பா.ஜெயரூபன்)

(அவர்கள் அனைவரும் பெண்ணை சிதைத்த பின்னர் தமக்குரிய தொணியில் வெளியேறுகின்றனர்.அவ்வேளை வேறொரு பெண்பாத்திரம் அப்பெண்ணை ஆதரவாக அழைத்து செல்கின்றது)

## *காட்சி* - IV

## வீடு

தாய் - அப்பா இவளுக்கு ஏதோ போண் வாங்கி தரட்டாம்

தந்தை - ஓ.எல். பாஸ் பண்ணினோண்ண தானே போண் வாங்கி தாறதெண்டது.

தாய் - இவளோட படிக்கிற பிள்ளை எல்லாம் ஏதோ டவுட்டு கேக்கிறாளவையளாம்.

தந்தை - அப்ப வாங்கி - குடுக்க தான் வேனும். என்ன போண் வேனுமாம்

தாய் - கலைக்கிற போணாம்

தந்தை - என்ன கலைக்கிற போணோ? (யோசித்துவிட்டு) அது கலைக்கிற போண் இல்லை. கலக்ஸி

தாய் - ஏதோ போண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை - (மகளை அழைத்து) - இந்தாரும் போண்

மகள் - ஐ....போண்

தந்தை - ஐ... போண் இல்லை. கலக்ஸி போண்

மகள் -அப்பா ஏன் கறுப்பில எடுத்தநீங்கள். வெள்ளையில எடுத்திருக்கலாம் தானே

தந்தை - பிள்ளையின்ர கலறில எடுக்கலாம் எண்டு ..... (பிள்ளை Phone ஐ வைத்துவிட்டு படித்தல்)

தாய் - என்ன போண் வாங்கி குடுத்தா பிள்ளை படிக்கமாட்டாள் எண்டினம். பிள்ளை படிக்கிறாள். (போண் அடிப்பதை அவதானித்துவிட்டு எடுத்து சென்று மகளிடம் கொடுத்தல்)

மகள் - அம்மா என்ர பிறன்ட் தான் நீங்கள் வச்சிட்டு போங்க பிறகு எடுக்கிறன்( தாய் சென்ற பின்)

மகள் - அண்ணா எனக்கு போண் எடுக்காதேங்கோ எண்டு சொன்னன் தானே? நான் படிக்க வேனும்

பாத்திரம் 1 - உங்களை படிக்க சொல்ல தான் எடுத்தனான். டேய் கட் பண்ணி போட்டாலடா டேய் ஒரு 50 ரூபாவை றீலோட் போட்டு விடுவம்

பாத்திரம் 2 - சரி போடன். உன்னோட பெரிய கரைச்சல் (றீலோட் போடல்)

மகள் - ஏன் றீலோட் போட்ட நீங்கள்

பாத்திரம் 1 - நீங்கள் தான் எடுக்க வேண்டாம் எண்டனீங்கள். அப்ப நீங்கள் எடுப்பியள் எண்டு தான்

மகள் - எனக்கு எடுக்காதீங்கோ.... . வீட்டில பெரிய பிரச்சினையாய் போடும்....(தெலைபேசி அழைப்பை துண்டிக்கிறாள்)

பாத்திரம் 1 - டேய் கட் பண்ணி போட்டாள் மெசேச் போட்டு விடுவம்

பாத்திரம் 2 - (மெசேச் வாசித்தல்) என்ன நான் உன்னை கடியில் சந்திக்கிறேன். டேய் என்ன ஏதேன் டொக்கருக்கு மெசேச் போட்டனியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாத்திரம் 1 - ஏன்? நான் உன்னை கடையில் சந்திக்கிறேன் எண்டு போட்டனான்
(இருவரும் சந்தித்தல்)

மகள் - நீங்கள் எனக்கு இனிலே் போன் எடுக்காதிங்க எண்டதை சொல்ல தான் வந்தனான்

பாத்திரம் 1 - நானும் இனிமேல் உங்களுக்கு போன் எடுக்கேல. இப்பிடி நேரில சந்திச்சு கதைப்பம் என்ன. இஞ்ச ஆக்களா கிடக்குது.. அங்கள போவம் (இருவரும் போதல்)

பாத்திரம் 2 - மச்சி நானும் வறட்டே

பாத்திரம் 1 - நில் வாறன்

பாத்திரம் 2 -என்னை ஏமாத்தி போட்டான் நானும் போன் வாங்கிறன். பத்தே நம்பர் தானே அடிக்கிறன் பிக்கப் பன்னுறன்

வெளியே இருந்து குரல்- யாருடா இவன். செருப்பு பிய்யும்

பாத்திரம் 2 - யாரடா ... நானில்லை....

(அனைத்து அரங்காடிகளும் மீண்டும்வட்டவடிவமாக அரங்கினுள் பிரவேசித்து உரையாடலை மேற்கொள்கின்றார்கள்)

அரங்காடி 1 - இதை நாங்கள் விரும்பிறதில்லை

அரங்காடி 2 - இப்படியான சமூகத்தை நாங்கள் விரும்பேல

அரங்காடி 3 - இதை நாங்கள் விரும் பேல

அரங்காடி 4 - நாங்கள் விரும்பிற சமூகம் இப்பிடி இருக்க வேணும்

(காட்சிப் படிமங்கள் உரையாடல்களுடன் இடம்பெறும்)

நபர் 1 - (ஒருவர் சிகரட் பிடித்தபடி நிக்கிறார் அவ்வேளை சிறுவன் ஒருவன் வருகின்றான் சிகறட்டை கீழே போட்டு விட்டு) நாங்கள் இதை பழகிப்போட்டு விட முடியாமல் இருக்கிறம். சின்ன பெடியள் எங்களை பாத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழகிப்போடுவாங்கள் அவங்களுக்கு முன்னால எண்டாலும் பத்தப்படாது.

தந்தை - (தந்தையை கண்ட மகன் பயத்துடன் அரங்கை சுற்றி வட்டவடிவமாக ஓடல் தந்தை அவனை அழைத்து வந்து) நான் இனி உனக்கு அடிக்கமாட்டன் ஏனென்டா நான் குடிக்கிறத விட்டிட்டன்.

மகன் - சத்தியமா?

தந்தை - சத்தியமா.

கதைசொல்லி - நாம் விரும்பிற சமூகம் வன்முறையற்ற, அமைதியான, போதைப்பொருள் பாவனையற்ற, மதுவிற்கு அடிமையற்ற சமூகம். இதை உருவாக்க நாம் எல்லோரும் பாடுபட வேண்டும் இது பற்றி எல்லாரும் சிந்தியுங்கோ..சிந்தியுங்கோ..

அனைத்து அரங்காடிகளும் - சிந்தியுங்கோ.. சிந்தியுங்கோ..

(அரங்காடிகள் அரங்கினை சுற்றி வட்டவடிவமாக வலம் வருவார்கள் அவ்வேளையில் பாடல் இடம்பெறும்)

பாடல்

**பெண்களின் உரிமை கண்ணெனப்போற்று**
**சிறுவர் உரிமையும் சிறப்புடன் போற்று**
**குழயை நீக்கி குடும்பம் அமைத்திடு**
**இணைய வெளியிலும் புகழில் ஓங்கிடு**

பாடல் (பா.ஜெயரூபன்)

தனனானே தனேதானானே.... என்ற தாளக்கட்டுடன் கூடிய வகையில் பாடலினை பாடிய படி வட்ட வடிவமாக ஆற்றுகையாளர்கள் அரங்கினுள் இருந்து வெளியேறுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈழத்து நாடக உலகில் இரட்டையர்களாக வலம் வரும் சகோதரர்கள் எஸ்.ரி.குமரன் மற்றும் எஸ்.ரி.அருள்குமரன் ஆகியோர் புத்தாக்க அரங்க இயக்கத்தை நிறுவி அதன் மூலம் காத்திரமான, சமூகப் பெறுமானம் மிக்க கலைப் பணியினை ஆற்றி வருகின்றனர். சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தும் மேடை நாடகங்கள், தெருவெளி அரங்காற்றுகைகள் மூலம் பலரது கவனத்தையும் புத்தாக்க அரங்க இயக்கம் ஈர்த்துள்ளது. அத்துடன் பல்வேறு பிரதேசங்களிலும் மாணவர்கள் மற்றும் ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு அரங்கப் பயிற்சிகளை வழங்கியும் வருகின்றது. இவற்றை நெறிப்படுத்துபவர்கள் ஆசிரியர்களான இந்த இரட்டையர்களே! அத்துடன் நாடகஞ்சார் கட்டுரைகள், நேர்காணல்கள், சமூகவியல் கட்டுரைகளையும் இவர்கள் எழுதி வருகின்றனர்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி(தேசிய பாடசாலை) ஆசிரியரான எஸ்.ரி.குமரன் அப்பாடசாலை மாணவர்கள் தனி நடிப்பில் தேசிய ரீதியில் வெற்றிபெறக் காரணமானவராவார். அத்துடன் இளைஞர் நாடக விழாவில் சிறந்த தயாரிப்புக்கான விருதினை வென்றவர். கொழும்பு றோயல் கல்லூரியின் தமிழ் நாடக மன்றத்தினால் நடத்தப்பட்ட பிரதியாக்கப் போட்டியில் **2012** மற்றும் **2013**ஆம் ஆண்டுகளில் தேசிய விருதைத் தனதாக்கியவர். அதே பாடசாலையால் நடத்தப்பட்ட குழு நாடகப் போட்டியில் மூன்றாம் இடத்தை வென்றவர். யாழ்.பல்கலைக்கழக நாடகமும் அரங்கியலும் சிறப்பு கலைப் பட்டதாரியான இவர் அதே பல்கலைக்கழகத்தில் சைவ சித்தாந்தத்தில் முதுகலைமாணிப் பட்டமும் பெற்றுள்ளார். மேலும் இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தில் பட்டப் பின் கல்வி டிப்ளோமா பட்டத்தையும் பெற்ற இவர் சைவப் புலவர், சித்தாந்த பண்டிதர் பட்டங்களையும் பெற்ற தகையாளர். சிறந்த மேடைப் பேச்சாளர், தொடர் சொற்பொழிவாளர், பட்டிமன்றப் பேச்சாளர், நடுவர் எனப் பல தளங்களிலும் செயற்பட்டு வருபவர்.

மானிப்பாய் இந்துக் கல்லூரி(தேசிய பாடசாலை) ஆசிரியரான எஸ்.ரி.அருள்குமரன் வலிகாமம் வலயத்தில் **2015**ஆம் ஆண்டுக்கான சிறந்த ஆசிரியர் விருதினை வென்றவர். அத்துடன் அரச ஊழியருக்கான ஆக்கத்திறன் போட்டியில் தேசிய விருதினை வென்றதுடன் இளைஞர் நாடக விழாவில் சிறந்த தயாரிப்புக்கான விருதினை வென்றவர். கொழும்பு றோயல் கல்லூரியின் தமிழ் நாடக மன்றத்தினால் நடத்தப்பட்ட பிரதியாக்கப் போட்டியில் தேசிய விருதைப் பெற்றதுடன் அதே பாடசாலையால் நடத்தப்பட்ட தனி நடிப்புப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவர்கள் **2012**இல் சிரேஸ்ட பிரிவில் மூன்றாமிடமும், **2013**இல் கனிஸ்ட பிரிவில் மூன்றாம் இடமும், **2014**இல் சிரேஸ்ட பிரிவில் இரண்டாம் இடமும், சிறந்த மேடை முகாமைத்துவத்துக்கான விருதும் பெறக் காரணமாக இருந்து வழிப்படுத்தியவர். யாழ்.பல்கலைக்கழக நாடகமும் அரங்கியலும் சிறப்பு கலைப் பட்டதாரியான இவர் அதே பல்கலைக்கழகத்தில் கலாசாரக் கற்கையில் முதுகலைமாணிப் பட்டமும் பெற்றுள்ளார். மேலும் இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தில் பட்டப் பின் கல்வி டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுள்ளார். பேச்சாற்றல் கைவரப் பெற்ற இவர் விவாதங்கள், பட்டிமன்றங்களில் தனது ஆற்றலை வெளிப்படுத்தி வருகின்றார்.

இவர்கள் இருவரதும் நெறியாள்கையில் இடம்பெற்ற தெருவெளி அரங்காற்றுகைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவருகின்றது.

சு.ஸ்ரீகுமரன்
உதவிக் கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்வி அலுவலகம்,
கிளிநொச்சி.

ISBN 978-955-43186-0-1
9 789554 318601

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org